- நாட்டில் யூரியா உர உற்பத்தி 25 மில்லியன் டன்களாக உள்ளது. 35 மில்லியன் டன் யூரியா தேவைப்படும் நிலையில், மீதமுள்ள உரம் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. அதேபோல், உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய டிஏபி உரமும் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகிறது.

## பெருங்கடல்களைக் காக்க வரலாற்று உடன்படிக்கை

- உலகின் பெருங்கடல்கள் மற்றும் அதன் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாக்கும் உடன்படிக்கையை ஐ.நா. உறுப்பு நாடுகள் மேற்கொண்டன.
- நியூயார்க்கில் நடைபெற்ற இது தொடர்பான பேச்சுவார்த்தையின் முடிவில் இந்தியா உள்பட 200 உறுப்புநாடுகள் இந்த உடன் படிக்கையில் கையொப்பமிட்டுள்ளன.

- இந்த உடன்படிக்கையின்படி, 2030-ஆம் ஆண்டுக்குள் பெருங்கடல்களின் 30 சதவீத பகுதி பாதுகாக்கப்பட்ட பகுதியாக மாற்றப்படும். அந்தப் பகுதிகளில் மீன்பிடிப்பு, கப்பல் போக்குவரத்து ஆழ்கடல் சுரங்கம் போன்ற செயல்பாடுகள் தடை செய்யப்படும்.

### முற்றிலும் சூரிய மின்சக்தியை பயன்படுத்தும் ஒடிஸா கிராமம்!

- ஒடிஸா மாநிலத்தில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் கந்தர்கார் மாவட்டத்தில் உள்ள தொலைதூர கிராமமான சக சாஹி, தனது மின்சாரத் தேவைக்கு முழுவதுமாக சூரிய மின் சக்தியைப் பயன்படுத்தும் கிராமமாக மாறியுள்ளது.
- தலைநகர் கட்டாக்
- முதலமைச்சர் நவீன் பட்நாயக்
- ஆளுநர் கணேஷி லால்

### ஒடிஸாவில் 142 இடங்களில் காட்டுத் தீ: நாட்டிலேயே மிக அதிகம்

- நாட்டில் அதிகபட்சமாக ஒடிஸா மாநிலத்தின் 142 இடங்களில் காட்டுத்தீ சம்பவங்கள் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
- இந்திய வன ஆய்வு நிறுவனம் (FSI) வெளியிட்ட தகவலின்படி நாடு முழுவதிலும் உள்ள 391 இடங்களில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.
- வனப் பகுதிகளில் மின்னல் தாக்குதல், வறண்ட மரங்கள் உரசிக்கொள்ளுதல் உள்ளிட்ட இயற்கை காரணங்களாலும், பற்றவைக்கப்பட்ட சிகரெட், பீடி, போன்றவற்றை வறண்ட இலைகள் காணப்படும் பகுதியில் எறிதல் போன்ற மனிதத் தவறுகளாலும் காட்டுத் தீ சம்பவங்கள் ஏற்படுகின்றன.
- மொத்தம் உள்ள 30 மாவட்டங்களில் 12 மாவட்டங்களில் காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சிமிலிபால் தேசிய பூங்கா உள்ள மயூர்பஞ்ச் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான காட்டுத் தீ சம்பவங்கள் பதிவானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
- FSI தொடக்கம் 1981
- தலைமையிடம் டேராடூன்
- அமைச்சகம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்.

## சுகாதாரம்

### 25 ஆண்டுகளுக்குள் சர்க்கரை நோய் இல்லாத இந்தியா!

- அடுத்த 25 ஆண்டுகளுக்குள் சர்க்கரை நோய் இல்லாத தேசத்தை உருவாக்கும் இலக்குடன் செயல்பட வேண்டும் என்று மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தினார்.
- பேறுகால சர்க்கரை நோயை கட்டுபடுத்துவதன் மூலம் பிற்காலத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க முடியும். 2047-ல் உலக அளவில் வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா உருவெடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- பேறுகால சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தினால் வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா உருவெடுக்கும்போது சர்க்கரை நோய் இல்லாத நிலையை நாம் எட்ட முடியும்.

## இயற்கை பேரழிவு – பாதுகாப்பு நடவடிக்கைகள்

### இயற்கை பேரிடர் பாதிப்புகளைக் களைய நவீன செயல்திறன்

- இயற்கை பேரிடர்களைக் கையாளும்போது எதிர்வினையைவிட செயலுக்கு முக்கியத்துவம் அளித்து வருங்கால தொழில்நுட்பங்களின் உதவியோடு பாதிப்பைக் குறைக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- புது தில்லியில், தேசிய அளவில் பேரிடர் அபாயக் குறைப்பு கருத்தரங்கின் 3-ஆவது அமர்வை வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்த பிரதமர் மோடி, பேரிடர் மீட்புப் பணிகளில் சிறந்து பணியாற்றிய வீரர்களுக்கு "சுபாஷ் சந்திர போஸ் ஆப் த பிரபந்தன்" விருதுகளை வழங்கி கௌரவித்தார்.
- நாட்டில் முதல் முறையாக 2001 – ஆம் ஆண்டு நிலநடுக்கத்துக்கு பிறகு குஜராத்தில்தான் பேரிடர் மேலாண்மை சட்டம் இயற்றப்பட்டது. பின்னர், குஜராத்தின் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய பேரிடர் மேலாண்மை சட்டம் கடந்த 2005 – ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமும், அமைக்கப்பட்டது.
- பேரிடர் பாதிப்புகளைச் சிறப்பாக கையாள வருங்கால தொழில்நுட்பத்தை மையப்படுத்தி நகரங்களின் உள்கட்டமைப்பைத் திட்டமிட வேண்டும்

### இந்தியாவைத் தவிர்த்துவிட்டு பருவநிலை மாற்றத்துக்கு தீர்வு காண முடியாது.

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் முக்கியப் பங்கை வகிக்கவுள்ளன. அத்துறையில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. சர்வதேச எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் முக்கியப் பங்கு வகிக்கும்.
- 2030 – ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்ய இந்தியா நிர்ணயித்துள்ள இலக்கை நோக்கி வேகமாகப் பயணம் மேற்கொண்டு வருகிறது. கடந்த 2018 – 2021 காலகட்டத்தில் சூரிய எரிசக்தி உற்பத்தியை 31 டெரா வாட் அளவுக்கு இந்தியா அதிகரித்துள்ளது.

## சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

### ஆரவல்லி பசுமைச்சுவர் திட்டம்

- ஹரியானா மாநிலம் குருகிராம் மாவட்டத்தில் உள்ள திக்லி கிராமத்தில் 'ஆரவல்லி பசுமைச்சுவர் திட்டத்தை' மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சர் பூபேந்திர யாதவ் தொடங்கி வைத்தார்.
- ஆரவல்லி பசுமைச் சுவர் திட்டமானது, ஐந்து மாநிலங்களில் பரவியுள்ள ஆரவல்லி மலைத்தொடரின் சுமார் 5 கி.மீ.க்கு இடையகப் பகுதியை பசுமையாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆரவல்லி பசுமைச்சுவர் திட்டம் ஆரவல்லியின் பசுமைப் பரப்பையும் பல்லுயிர் பெருக்கத்தையும் காடு வளர்ப்பு, காடு வளர்ப்பு மற்றும் நீர் ஆதாரங்களை மீட்டெடுப்பதன் மூலம் அதிகரிப்பது மட்டுமல்லாமல், இப்பகுதியின் மண் வளம், நீர் இருப்பு மற்றும் காலநிலை ஆகியவற்றை மேம்படுத்தும்.

## பொருளாதாரம்

## இந்தியப் பொருளாதாரத்தின் தற்போதைய போக்குகள்

### பழைய வாகனங்கள் அழிப்பு கொள்கையால் ரூ.40,000 கோடி கூடுதல் ஜிஎஸ்டி வருவாய்

- ஜெய்பூரில் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் பயன்பாட்டு காலம் முடிந்த வாகனங்களை அழிக்கும் மையம்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மோட்டார் வாகன உற்பத்தி துறையின் பங்களிப்பு 7.1 சதவீதமாக உள்ளது. மதிப்பு ரூ.7.8 லட்சம் கோடி.

- 4 கோடி வேலைவாய்ப்பு உருவாக்கம்.
- இந்த எண்ணிக்கை 2025-ஆம் ஆண்டுக்குள் 5 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சர்வதேச மோட்டார் வாகன உற்பத்தி மையமாக இந்தியாவின் மதிப்பை ரூ.15 லட்சம் கோடி அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நிதிப் பற்றாக்குறை இலக்கு 67.8 சதவீதத்தை எட்டியது

- அரசின் செலவினத்துக்கும் வருவாய்க்கும் இடையேயான வேறுபாடே நிதிப் பற்றாக்குறையாகும். செலவினத்தை சமாளிப்பதற்காக அரசு எவ்வளவு கடன் வாங்க வேண்டும் என்பதை அளவிடும் கருவியாகவும் நிதிப் பற்றாக்குறை உள்ளது.
- நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையை ரூ. 17.55 லட்சம் கோடிக்குள் கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இது மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மதிப்பில் 6.4 சதவீதம் ஆகும்.
- இது ஒட்டுமொத்த இலக்கில் 67.8 சதவீதம் ஆகும்.

## பொதுத் துறை நிறுவனங்கள் விற்பனையில் அவசரம் காட்டவில்லை

- பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை தனி யாருக்கு விற்பதில் மத்திய அரசு அவசரம் காட்டவில்லை என்றும் நாட்டின் முக்கிய துறைகளின் நிறுவனங்களில் அரசு தொடர்ந்து பங்கு வகிக்கும் என்றும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதிப்பட தெரிவித்தார்.
- அரசின் நிதி ஆதாயத்துக்காக முக்கியமற்ற துறைகளின் பொது நிறுவனப் பங்கு களை அரசு தனியார்மயப்படுத்துகிறது. அதிலும் சுயமாக தனித்து இயங்கக் கூடிய பெரிய நிறுவனங்களைத் தவிர்த்து சிறிய அளவிலான அல்லது போட்டியில் நீடிக்க இயலாத நிறுவனங்களின் பங்குகளை மட்டுமே விற்பனை செய்கிறோம். அத்தகைய சிறிய நிறுவனங்களை பெரிய நிறுவனங்களுடன் இணைத்து அதன் செயல்பாட்டை ஊக்குவிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசின் சொத்துகள் பயனற்று இருப்பதைவிட பணமாக்குவதை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

- அரசின் நிறுவனங்களின் பங்குகளைத் துறந்து ரூ.51000 கோடி வருவாயை ஈட்ட மத்திய பட்ஜெட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

### இளைஞர்களின் திறன் மேம்பாட்டால் நாடு 3ஆவது பெரிய பொருளாதாரமாகும்

- பல்வேறு துறைகளில் காணப்படும் வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு இளைஞர்களின் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியம்.
- உலகின் 5 –ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக இந்தியா தற்போது திகழ்ந்து வருகிறது. .இளைஞர்களின் திறனை மேம்படுத்தினால் மட்டுமே நாட்டை 3–ஆவது பெரிய பொருளாதாரமாக மாற்றுவதற்கான இலக்கை அடைய முடியும்.

## பணம் மற்றும் வங்கி

### 'கிரிப்டோகரன்சி' வர்த்தக நிறுவனங்கள் வாடிக்கையாளர் விவரம் பெறுவது அவசியம்

- 'கிரிப்டோகரன்சி' எனப்படும் எண்ம, பண வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்கள் தங்கள் தளத்தைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் விவரங்களை (கேஒய்சி) பெறுவது அவசியமாக்கப்பட்டுள்ளது.
- எண்ம பணப் பரிவர்த்தனைகள் மூலம் கருப்புப்பண பரிமாற்றம் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- 'கிர்ப்டோகரன்சி' உள்ளிட்ட எண்ம பணப் பரிவர்த்தனையில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் தரகு அமைப்புகள் இனி கருப்புப் பண தடுப்புச் சட்டத்தின் கீழ் தகவல் அளிக்கும் அமைப்புகளாகவும் செயல்பட வேண்டும். அதாவது சந்தேகத்துக்கு இடமான பரிவர்த்தனைகள் நடைபெறும்போது அது தொடர்பாக வருமான வரித்துறை உள்ளிட்ட உரிய கண்காணிப்பு அமைப்புகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- 'கிரிப்டோகரன்சி பரிவர்த்தனை விவரத்தையும் 5 ஆண்டுகள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

### இந்திய – பசிபிக் பொருளாதார திட்டம் அதிக பலனளிக்கும் : அமெரிக்கா

- "இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைவிட (எஃப்டிஏ) இந்திய–பசிபிக் பொருளாதார ரீதியில் அதிக நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும்" என்று அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஜீனா ரேமாண்டோ கூறினார்.

### ஆஸ்திரேலிய பிரதமர் ஆல்பனேசி இந்திய வருகை

- ஆஸ்திரேலிய பிரதமராக கடந்த ஆண்டு மே மாதம் பொறுப்பேற்ற ஆன்டனி ஆல்பனேசி முதல் முறையாக இந்தியாவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

- பிரதமர் மோடி – பிரதமர் ஆல்பனேசி இடையேயான பேச்சு வார்த்தை தில்லியில் நடைபெறவுள்ளது. அந்தப் பேச்சுவார்த்தையின்போது வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, முக்கிய கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவது தொடர்பாகத் தலைவர்கள் இருவரும் விரிவாக விவாதிக்கவுள்ளனர்.

## CISF இன் 54 வது தொடக்க தினம்

- நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக ஹைதராபாத்தில் நடைபெற்ற CISF இன் 54வது தொடக்க நாள் விழாவில் , 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைய நாடு முயல்வதால், முக்கிய நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கான சமீபத்திய தொழில்நுட்பத்துடன் விரைவில் அது புதுபிக்கப்படும்.

### CISF பற்றி:

- மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படைகள் அல்லது CISF என்பது இந்தியாவின் உள்துறை அமைச்சகத்தின் மேற்பார்வையின் கீழ் வரும் ஆறு துணை ராணுவக் குழுக்களில் ஒன்றாகும்.
- CISF என்பது நாட்டின் முதன்மையான ஆயுதம் தாங்கிய போலீஸ் படையாகும்.
- இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.
- CISF 1969 இல் நிறுவப்பட்டது.

## கண்காணிக்கப்பட வேண்டிய திரள் நிதி தளங்கள்

- உலக அளவில் 2,80,984 கோடி ரூபாய் (34 பில்லியன் அமெரிக்க டாலர்) சந்தை மதிப்புடைய தொழிலாக உருவெடுத்துள்ள திரள் நிதி (க்ரவுட் ஃபண்டிங்) பெறும் முறை இந்தியாவிலும் வலுவாக வளர்ச்சி அடைந்துள்ளது.
- கோவிட் 19 நோய்த்தொற்றின்போது கடுமையாக பாதிக்கப்பட்ட விளிம்பு நிலை மனிதர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்கும் அவசர காலங்களில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் சமூக ஊடகங்கள் பயன்பட்டன என்றும், இந்த சமூக ஊடகங்களின் மூலம் மருத்துவ வறுமை போக்கும் நிதி திரட்டும் உத்திகள் அதிகரித்தன என்றும் தரவுகள் கூறுகின்றன.

## பிப்ரவரி ஜிஎஸ்டி வருவாய் ரூ.1.49 லட்சம் கோடி

- பிப்ரவரி மாதத்தில் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) வருவாய் ரூ.1,49,577 கோடியாக இருந்ததாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

- இது 2022-ஆம் ஆண்டு பிப்ரவரி மாத வருவாயுடன் (ரூ. 1.33 லட்சம் கோடி) ஒப்பிடுகையில் 12 சதவீத அதிகரிப்பாகும். ஜிஎஸ்டி மாதாந்திர வருவாய் ரூ.1.40 லட்சம் கோடியைக் கடப்பது இது 13-ஆவது முறையாகும்.
- முக்கியமாக, கடந்த ஆண்டு மார்ச்சில் இருந்து தொடர்ந்து 12 மாதங்களாக ஜிஎஸ்டி வருவாய் ரூ.1.40 லட்சம் கோடிக்கு அதிகமாகவே உள்ளது.
- வரலாற்றிலேயே அதிகபட்சமாகக் கடந்த ஆண்டு ஏப்ரலில் ஜிஎஸ்டி வருவாய் ரூ.1.68 லட்சம் கோடியாக இருந்தது.

## அறிவியல்

### அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளத்தால் தென் இந்தியா வளர்ச்சியடையும்: இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன்

- குலசேகரப்பட்டினத்தில் அமைய உள்ள ராக்கெட் ஏவுதளம் மூலம் தென் இந்தியா பெரிதும் வளர்ச்சியடையும் என இஸ்ரோ முன்னாள் தலைவர் கே. சிவன் தெரிவித்தார்.
- விண்ணுக்கு மனிதனை அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், சந்திராயன் – 3 விண்ணில் செலுத்தப்படுவதற்கு தயாராகி வருகிறது.
- இதேபோல, சூரியன் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக ஆதித்யா 1 விண்கலமும் தயாராகி வருகிறது. செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதற்கான செலவு பிற நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் குறைவு என்பதால், அண்டை நாடுகள் நம் நாட்டிலிருந்து விண்கலத்தை விண்ணில் செலுத்துகின்றன. மேலும், நம்முடைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பிற நாடுகள் அவர்களுடைய செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ விரும்புகிறார்கள்.

### பிரமோஸ் ஏவுகணை

- நாட்டின் பாதுகாப்பு துறையில் பயன்படுத்தப்படும் பிரம்மோஸ் ஏவுகணையின் செயல்திறனை பரிசோதிக்கும் புதிய சாதனம் சென்னையில் அறிமுகம்

### பிரம்மோஸ் திட்டம் பற்றி:

- இது இந்தியா மற்றும் ரஷ்யாவின் கூட்டு முயற்சியாகும்.

- இது 1998 இல் தொடங்கப்பட்டபோது 30% மட்டுமே இருந்த உள்நாட்டு திறன் தற்போது நீண்ட தூரம் வந்துள்ளது.இதன்மூலம் கொள்முதல் செலவு 75% குறையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது
- இத்திட்டம் 25,000 வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவியுள்ளது.
- சமீபத்தில் டேட்டா பேட்டர்ன்ஸ் பிரைவேட் லிமிடெட் தயாரித்த 27வது பிரம்மோஸ் ஏவுகணை சோதனைக் கருவியை (COE) அறிமுகப்படுத்தும் விழா நடைபெற்றது.

## பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றி

- ஒலியின் வேகத்தைவிட அதிகமான வேகத்தில் செல்லும் பிரமோஸ் ஏவுகணையை இந்திய கடற்படை அரபிக் கடலில் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்தது.
- கப்பல், விமானம், நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் நிலப் பகுதியிலிருந்து இலக்கைத் தாக்கி அழிக்கும், பிரமோஸ் ஏவுகணை, இந்திய – ரஷிய கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்டது. இது ஒலியின் வேகத்தை விட மூன்று மடங்கு வேகத்தில் பயணிக்கும் திறன்கொண்டது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மேகா – டிராபிக்ஸ்-1 (எம்டி1) செயலிழக்கச் செய்யப்பட்ட குறைந்த புவி சுற்றுப்பாதை செயற்கைக்கோளை கட்டுப்படுத்தி மீண்டும் நுழைவதற்கான சவாலான சோதனைக்கு தயாராகி வருகிறது.
- வெப்பமண்டல வானிலை மற்றும் காலநிலை ஆய்வுகளுக்காக ISRO மற்றும் பிரெஞ்சு விண்வெளி நிறுவனமான CNES ஆகியவற்றின் கூட்டு செயற்கைக்கோள் முயற்சியாக MT1 அக்டோபர் 12, 2011 அன்று ஏவப்பட்டது.

## ஸ்க்ரப் டைபஸ் காய்ச்சல்

- உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஸ்க்ரப் டைபஸ் காய்ச்சலுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சையை இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- தலைவலி, இருமல், மூச்சு திணறல் போன்றவை இதன் அறிகுறிகள். ஓரியன்டியா சுட்சுகாமுஷி என்ற பாக்டீரியாவால் உண்டாகும் இந்நோய் உயிருக்கு ஆபத்தானதாகும். இத்தொற்று விலங்குகள் வழியாக மனிதர்களுக்கு பரவும் தன்மை கொண்டது.

## மத்ஸ்யா 6000

- 2026ஆம் ஆண்டு நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படும் சமுத்ராயன் இயக்கத்தின் ஒரு பகுதியாக கடல் மட்டத்திலிருந்து 6,000 மீட்டர் ஆழத்திற்கு மூன்று பேர் கொண்ட குழு அனுப்பப்படும் திட்டமாகும்.

### மத்ஸ்யா பற்றி

- மத்ஸ்யா, அரிய கனிமங்களை ஆராய்வதற்காக ஆழ்கடல் ஆய்வு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்திய தயாரிப்பான ஆழமான நீரில் மூழ்கும் வாகனம்.
- இது சாதாரண செயல்பாட்டின் கீழ் 12 மணிநேரம் மற்றும் மனித பாதுகாப்புக்காக அவசரகாலத்தில் 96 மணிநேரம் தாங்கும் திறன் கொண்டது.

### சமுத்ராயன் திட்டம்:

- அக்டோபர் 2021 இல் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது, சமுத்ராயன் என்பது மனிதர்களைக் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல் ஆகும், இது விஞ்ஞானிகள் நேரடித் தலையீட்டின் மூலம் ஆராயப்படாத ஆழ்கடல் பகுதிகளைக் கண்காணிக்கவும் புரிந்துகொள்ளவும் அனுமதிக்கும்.
- ஆழமான கடல் ஆய்வுக்கான அறிவியல் சென்சார்கள் மற்றும் கருவிகளின் தொகுப்புடன் கடலில் 6,000 மீட்டர் ஆழத்திற்கு மூன்று மனிதர்களை எடுத்துச் செல்ல இது ஒரு சுயமாக இயக்கப்படும் ஆள் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல் ஆகும்.

## விண்வெளி

### சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு 4 வீரர்களை அனுப்பியது ஸ்பேஸ்எக்ஸ்

- அமெரிக்கா, இரஷியா, ஐக்கிய அரபு அமீரக நாடுகளைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்களை, பிரபல தொழிலதிபர் எலான் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பியுள்ளது.
- கென்னடி விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து, ஸ்பேக்ஸ்எக்ஸின் பால்கன் ராக்கெட் மூலம் அனுப்பப்பட்ட டிராகன் விண்கலம், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இணைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### MRSAM ஏவுகணை சோதனை வெற்றி

- நிலத்தில் இருந்து நடுத்தர தொலைவில் உள்ள வான் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் எம்ஆர்எஸ்ஏஎம் ஏவுகணை வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.
- ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் போர்க் கப்பலிலிருந்து இந்திய கடற்படையினர் இந்தச் சோதனையை மேற்கொண்டனர்.
- எதிரி நாட்டு கப்பல்களை அழிக்கும் ஆயுதமாக எம்ஆர்எஸ்ஏஎம் ஏவுகணையைப் பயன்படுத்தும் வகையில் இந்தச் சோதனை நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

- அரசு நிறுவனமான பாரத் டைனமிக்ஸ் நிறுவனம் இந்த ஏவுகணையைத் தயாரித்துள்ளது.

'நிஸார்' செயற்கைக்கோள் : இஸ்ரோவிடம் அமெரிக்கா ஒப்படைப்பு

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸாவும், இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமும் (இஸ்ரோ) இணைந்து அமெரிக்காவில் கூட்டாக உருவாக்கிய 'நிஸார்' என்ற புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை இஸ்ரோவிடம் அமெரிக்க விமானப் படை ஒப்படைத்தது.
- இந்த செயற்கைக்கோள் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்திலிருந்து வரும் 2024-இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாசா-இஸ்ரோ கூட்டு செயற்கைக்கோள்

- 2024 முதல் காலாண்டில் இந்திய மண்ணில் இருந்து நாசா-இஸ்ரோ செயற்கை துளை ரேடார் (NISAR) ஏவப்படும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

நிசார் பற்றி

- இது நாசா மற்றும் இஸ்ரோ இணைந்து உருவாக்கப்படும் குறைந்த பூமி சுற்றுப்பாதை (LEO) ஆய்வகமாகும்.
- இது 12 நாட்களில் முழு உலகத்தையும் வரைபடமாக்கும் மற்றும் பூமியின் சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களை பகுப்பாய்வு செய்வதற்கு நம்பகமான இடஞ்சார்ந்த மற்றும் தற்காலிகத் தரவை வழங்கும்.

நட்சத்திர உணரி கண்டுபிடிப்பு

- இந்திய வான் இயற்பியல் கழக ஆராய்ச்சியாளர்கள் குறைந்த செலவில் நட்சத்திர உணரியை உருவாக்கியுள்ளனர்.
- இந்திய வான் இயற்பியல் நிறுவனம் (IIA) வானியல் மற்றும் சிறிய CubeSat வகை செயற்கைக்கோள் பயணங்களுக்கான குறைந்த விலை நட்சத்திர உணரியை உருவாக்கியுள்ளது.
- ஸ்ட்ராபெர்ரி சென்ஸ் இஸ்ரோவினால் PS4 ஆர்பிட்டல் பிளாட்ஃபார்மில் தொடங்குவதற்கு தயாராக உள்ளது, மேலும் இது எதிர்காலத்தில் க்யூப்சாட்கள் மற்றும் பிற சிறிய செயற்கைக்கோள் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படலாம்.

IIA பற்றி:

- இது ஒரு கல்வி நிறுவனம் 1786 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- நோக்கம் இயற்பியல் அல்லது வான் இயற்பியலின் பல்வேறு வடிவங்களில் ஆராய்ச்சி மற்றும் நிபுணத்துவம்.
- தலைமையகம் பெங்களுரு
- இந்த நிறுவனம் இந்தியாவில் கொடைக்கானல் (கொடைக்கானல் சோலார் அப்சர்வேட்டரி), காவலூர் (வைனு பாப்பு ஆய்வுக்கூடம்), கௌரிபிதனூர் (கௌரிபிதனூர் வானொலி ஆய்வகம்), ஹான்லே (இந்திய வானியல் ஆய்வுக்கூடம்) மற்றும் ஹோசகோட் உள்ளிட்ட ஆய்வகங்கள் மற்றும் ஆய்வகங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது.

**யுவிகா திட்டம்**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ இளம் விஞ்ஞானி திட்டம் 2023 யை தொடங்கவுள்ளது.
- விண்வெளி தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் பயன்பாடுகளின் அடிப்படைகளை இளைய குழந்தைகளுக்கு கற்பிப்பதற்காக இந்த திட்டம் இஸ்ரோவால் நடத்தப்படுகிறது.

திட்டத்தைப் பற்றி:

- இஸ்ரோவின் முன்னாள் தலைவர் கே. சிவன் ஜனவரி 18, 2019 அன்று திட்டத்தை அறிவித்தார், மேலும் இது நான்கு மாதங்களுக்குப் பிறகு மே 17 அன்று தொடங்கப்பட்டது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பள்ளி மாணவர்களுக்காக "இளம் விஞ்ஞானி திட்டம்" "யுவ விஞ்ஞானி கார்யக்ரம்", யுவிகா என்ற .சிறப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து வருகிறது.

நோக்கம்:

- நமது நாட்டின் எதிர்கால இளைஞர்களிடையே விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் வளர்ந்து வரும் போக்குகளில் இளைய மாணவர்களுக்கு விண்வெளி தொழில்நுட்பம், விண்வெளி அறிவியல் மற்றும் விண்வெளி பயன்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவை வழங்குதல்.CBSE, ICSE மற்றும் மாநில பாடத்திட்டத்தை உள்ளடக்கிய ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் இதில் பங்கேற்க மூன்று மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**தகுதிகள்**

- 8ஆம் வகுப்பு முடித்து தற்போது 9ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள்

## இஸ்ரோ 36 ஒன்வெப் செயற்கைக்கோள்

- இஸ்ரோ 36 ஒன்வெப் செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது
- ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்தில் இருந்து 36 ஒன்வெப் செயற்கைக்கோள்களை சுமந்து கொண்டு LVM3-M2 ஐ இஸ்ரோ ஏவியது. இஸ்ரோவின் வணிகப் பிரிவான நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) ஒன்வெப் நிறுவனத்துடன் இரண்டு கட்டங்களாக 72 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்கான ஒப்பந்தத்தில் 1,000 கோடி ரூபாய்க்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- அக்டோபர் 23, 2022 அன்று 36 செயற்கைக்கோள்களின் முதல் தொகுப்பு LVM3-M2 இல் ஏவப்பட்டது.
- இது LVM3 இன் ஆறாவது விமானம் ஆகும். இந்த ராக்கெட் சந்திரயான் 2 உட்பட ஐந்து தொடர்ச்சியான வெற்றிகரமான பயணங்களை கொண்டுள்ளது.
- இந்த ஏவுதல், புவி தாழ்வட்டப்பதையில் (LEO) இணைப்பு மற்றும் விண்வெளி அடிப்படையிலான இணையத்தின் பரவல் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க திறன்களிலிருந்து பயனடைவதற்கு இந்தியாவுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும்.
- இது குறைந்த நிலையான பிராட்பேண்ட் ஊடுருவலின் சிக்கலைத் தீர்க்கவும், நாட்டின் மிகத் தொலைதூரப் பகுதிகளில் டிஜிட்டல் பிளவைக் குறைக்கவும் உதவும்.

## சந்திரயான் 3 விண்கலம் 2023 ஆம் ஆண்டின் மத்தியில் ஏவப்படும்: இஸ்ரோ விண்வெளி

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவர் எஸ்.சோமநாத் இந்தியாவின் மூன்றாவது நிலவுப் பயணமான சந்திரயான்-3 மற்றும் முதல் சூரியப் பயணமான ஆதித்யா L1 2023 ஆம் ஆண்டின் மத்தியில் ஏவப்படும் என்று தெரிவித்தார்.
- அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் (PRL) ஏற்பாடு செய்யப்பட்ட 4வது இந்திய கிரக அறிவியல் மாநாட்டில் "விண்வெளி மற்றும் கிரக ஆய்வுக்கான இந்திய திறன்கள்" எனும் தலைப்பில் பேசிய அவர் இந்தியாவின் முதல் சோலார் மிஷனான ஆதித்யா-L1, "மிகவும் தனித்துவமான சூரிய கண்காணிப்பு திட்டமாக

இருக்கும், அதற்கான கருவிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன, மேலும் இஸ்ரோ அவற்றை செயற்கைக்கோளில் ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

- மேலும், சந்திரயான்-3 பணியானது, சந்திரனின் மேற்பரப்பில் பாதுகாப்பாக தரையிறங்குதல் மற்றும் உலாவுதல் ஆகியவற்றில் end to end வரையிலான திறனை வெளிப்படுத்துகிறது என்று கூறினார்.

## தினசரி தேசிய நிகழ்வு

### கங்கா விலாஸ் கப்பலின் முதல் பயணம் திப்ருகரில் நிறைவு

- இந்தக் கப்பல் தனது முதல் பயணத்தை கடந்த ஜனவரி மாதம் உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் தொடங்கியது. இந்த சொகுசு கப்பலின் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- இது புத்தகயா, விக்ரம் ஷிலா, சுந்தரவனக்காடுகள், காஜிரங்கா தேசியப்பூங்கா, வங்கதேசத்தின் டாக்கா வழியாக அசாமில் உள்ள திப்ருகரில் பயணத்தை முடிக்கும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டது.
- 3,200, கிலோமீட்டர் தூரம் பயணம் மேற்கொண்டு உலகின் மிக நீளமான நதிவழிக் கப்பல் என்ற பெயரை இந்தக் கப்பல் பெற்றுள்ளது. இதில் பயணம் செய்ய அடுத்த 2 ஆண்டுகளுக்கு முன்பதிவு செய்து முடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- இந்தக் கப்பலில் பயணிக்க ஒரு நாளைக்கு ஒரு பயணிக்கு ரூ.25 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஒரு பயணி இந்தக் கப்பலில் 40 நாள் பயணம் செய்ய சுமார் ரூ.20 லட்சம் வரை செலவாகும்.

### இந்தியாவில் முதல் வெளிநாட்டு பல்கலைக்கழகம்: குஜராத்தில் அமைகிறது

- ஆஸ்திரேலியாவை சேர்ந்த டீகின் பல்கலைக்கழகம் குஜராத்தில் உள்ள கிஃப்ட் நகரத்தில் தனது கிளை வளாகத்தை முதல் முறையாக அமைக்கிறது.

### G20 மாநாடு

- ஜி20 நாடுகள் பங்கேற்கும் கல்வி தொடர்பான கூட்டம் அமிர்தசரஸில் தொடங்கியது
- G20 உறுப்பு நாடுகளின் கலந்துரையாடலில் இருந்து ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான தொடர்புடைய கொள்கைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை அடையாளம் காண்பதில் இந்த நிகழ்வு கவனம் செலுத்தும். இந்தக் கூட்டங்கள் பங்கேற்கும் நாடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் கல்வி

ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் புதிய ஒத்துழைப்பு வாய்ப்புகளைப் பற்றி விவாதிக்கவும் வாய்ப்பளிக்கும்.

## பால் உற்பத்தியில் இந்தியா முதன்மை

- 2023 -2024ல் உலகின் மொத்த பால் உற்பத்தியில் இந்தியா 33% பங்களிக்கும்.
- 'உலகிற்கு இந்தியாவின் பால்: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்' என்ற தலைப்பில் இந்திய பால் சங்கம் (ஐடிஏ) ஏற்பாடு செய்த 49வது பால் தொழில் மாநாடு.
- கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் பால் துறை ஆண்டுதோறும் 6.6% வளர்ச்சி கண்டுள்ளது.
- இந்தியாவின் பால் பதப்படுத்தும் திறன் ஒரு நாளைக்கு சுமார் 126 மில்லியன் லிட்டர் ஆகும், இது உலகிலேயே அதிகம்.

## வந்தே பாரத் திட்டம்

- இந்திய ரயில்வே தனது 11வது வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை இந்த மாதம் தொடங்க உள்ளது.
- புதிய அரை அதிவேக ரயில் புது தில்லி மற்றும் ஜெய்ப்பூர் இடையே இயக்கப்படும்.
- இந்த ரயில் 2023 மார்ச் மூன்றாவது வாரத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

## வந்தே பாரத் பற்றி:

- இது இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட எஞ்சின் இல்லாத அரை-அதிவேக ரயில் ஆகும். முன்னதாக, இது ரயில் 18 என்ற பெயரில் அறியப்பட்டது.
- இது சென்னை ICF ஆல் கட்டப்பட்டது.
- இந்த ரயில் 100% 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உருவாக்கபட்டது.

## இந்தியாவில் உள்ள நவீன லோகோமோட்டிவ் தொழிற்சாலைகள்:

- சித்தரஞ்சன் லோகோமோட்டிவ் ஒர்க்ஸ்- சித்தரஞ்சன்.
- டீசல் லோகோமோட்டிவ் ஒர்க்ஸ்-வாரணாசி.
- ஒருங்கிணைந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை - சென்னை.
- ரயில் பெட்டித் தொழிற்சாலை-கபுர்தலா.
- ரயில் சக்கர தொழிற்சாலை-பெங்களூரு

## தொலைத் தொடர்பு தொழில்நுட்ப ஏற்றுமதியில் வேகம் எடுக்கும் இந்தியா:

- .புதுடெல்லியில் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) பகுதி அலுவலகம் மற்றும் புத்தாக்க மையத்தை திறந்து வைத்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பயனராக இருந்த இந்தியா தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் பெரிய ஏற்றுமதியாளராக வேகமாக முன்னேறி வருகிறது.
- 5ஜி மொபைல் தொழில்நுட்பத்தை அதிவேகமாக வெளியிடும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 5ஜி சேவை தொடங்கப்பட்ட 120 நாட்களில் 125 நகரங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.
- 2014ல் 25 கோடியாக இருந்த இணையதள பயனாளர்களின் எண்ணிக்கை 85 கோடியாக அதிகரித்துள்ளது.
- மேலும், இந்தியா விரைவில் 100 புதிய 5G ஆய்வகங்களை அமைக்கும் என்று அறிவித்தார், இது இந்தியாவின் தனிப்பட்ட தேவைகளைப் பொறுத்து 5G பயன்பாடுகளை உருவாக்க உதவியாக இருக்கும்.
- அவர் பாரத் 6ஜி தொலைநோக்குப் பார்வை ஆவணத்தை வெளியிட்டார் மற்றும் 6G R&D சோதனைத் தளத்தை அறிமுகப்படுத்தினார். பாரத் 6G தொலைநோக்கு ஆவணம் 6G (TIG-6G) இல் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு குழுவால் தயாரிக்கப்பட்டது, இது நவம்பர், 2021 இல் பல்வேறு அமைச்சகங்கள்/துறைகளின் உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- இந்தியாவின் இலகுவான,பாதுகாப்பான, வெளிப்படையான மற்றும் நம்பகமான தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் மாதிரியின் காரணமாக பிரதமர் இந்த தசாப்தத்தை 'Techade' என்றும் அழைத்தார்.

## 'கால் பிஃபோர் யு டிக்'(CBuD) செயலி:

- 'கால் பிஃபோர் யு டிக்' என்ற மொபைல் செயலியையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- கால் பிஃபோர் யு டிக் (CBuD) ஆப் என்பது ஒருங்கிணைக்கப்படாத தோண்டுதல் மற்றும் அகழ்வாராய்ச்சியின் காரணமாக ஏற்படும் ஆப்டிகல் ஃபைபர் கேபிள்கள் போன்ற அடிப்படை சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்க வடிவமைக்கப்பட்ட ஒரு கருவியாகும்.

## "டிஜிக்ளைம்" எண்ம முறை வசதி

- விவசாயிகள் பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையை விரைவாக பெறும் வகையில், தேசிய பயிர்க் காப்பீடு இணையதளம் மூலம் இழப்பீட்டுத் தொகையை பெறுவதற்கான 'டிஜிக்ளைம்' எண்ம முறை வசதியை மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கி வைத்தார்.
- பிரதமரின் பசல் பீமா யோஜனா என்கிற பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. பயிருக்கு சேதம் ஏற்படும் பட்சத்தில் விவசாயிகள் இழப்பீட்டுத் தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.
- உரிய சேதாரங்களை மதிப்பிட்டு காப்பீட்டு நிறுவனங்களிடம் தொகையை பெற்று மத்திய அரசு, மாநில அரசுகள் வழியாக இழப்பீட்டுத் தொகையை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குகிறது.

## காசநோய் தடுப்பு திட்டங்கள் தொடக்கம்

- சர்வதேச காசநோய் ஒழிப்பு தினம் ஆண்டுதோறும் மார்ச் 24-ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- அதையொட்டி உத்தர பிரதேசத்தின் வாரணாசியில் சர்வதேச காசநோய் மாநாடு நடைபெற்றது. அதில் பங்கேற்ற பிரதமர் மோடி, காசநோய் தடுப்பு திட்டங்களைத் தொடக்கி வைத்தார்.
- காசநோய் இல்லா கிராம உள்ளாட்சிகள், குறுகியகால காச நோய் தடுப்பு சிகிச்சைத் திட்டம், குடும்பத்தை மையப்படுத்திய காசநோய் சிகிச்சை ஆகிய திட்டங்களை அவர் தொடக்கி வைத்தார். நடப்பாண்டுக்கான இந்தியா காசநோய் அறிக்கையையும் பிரதமர் மோடி வெளியிட்டார்.

## சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

- தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவில் 246 கழுகுகள் ஒத்திசைக்கப்பட்ட கணக்கெடுப்பில் காணப்பட்டன
- தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா எல்லைகளில் நடத்தப்பட்ட முதல் ஒத்திசைவு கணக்கெடுப்பில் 246 கழுகுகள் காணப்பட்டன.
- முதுமலை புலிகள் காப்பகம் (எம்டிஆர்) மற்றும் அதை ஒட்டிய நிலப்பரப்பில் தமிழ்நாட்டில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் (எஸ்டிஆர்), கேரளாவில் உள்ள வயநாடு வனவிலங்கு சரணாலயம் (டபிள்யூடபிள்யூஎஸ்), பந்திப்பூர் புலிகள் காப்பகம்

ஆகியவற்றில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. (BTR) மற்றும் கர்நாடகாவில் உள்ள நாகர்ஹோல் புலிகள் காப்பகம் (NTR). MTR இல் மொத்தம் 98 கழுகுகள், STR இல் இரண்டு, WWS இல் 52, BTR இல் 73, மற்றும் NTR இல் 23 கழுகுகள் காணப்பட்டன.

## காசநோய் ஒழிப்பை நோக்கி நகர்கிறது இந்தியா

- நாட்டில் காசநோய் (TB) சுமையை மதிப்பிடும் உலகின் முதல் நாடாக இந்தியா மாறியுள்ளது மற்றும் நோயின் சுமையை மதிப்பிடுவதற்கு அதன் சொந்த கணித முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் உலகளாவிய மதிப்பீடுகள் உலக சுகாதார நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது
- WHO மதிப்பிட்ட 210 க்கு பதிலாக, இந்தியாவின் காசநோய் பாதிப்பு விகிதம் 1,00,000 மக்கள்தொகைக்கு 172 ஆக உள்ளது. தமிழ்நாட்டில் இந்த விகிதம் 121 ஆக உள்ளது .
- உலகிலேயே இந்தியாவில்தான் அதிக காசநோய் பாதிப்பு உள்ளது. உலகளாவிய காசநோயால் பாதிக்கப்பட்டவர்களில் இந்தியாவில் மட்டும் 28 சதவீதம் பேர் உள்ளனர்.
- உலகளவில், காசநோயால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1.6 மில்லியன் மக்கள் இறக்கின்றனர். காசநோய் இறப்புகளுக்கு இந்தியாவும் முக்கிய காரணமாகும்.
- உலக சுகாதார நிறுவனம் (WHO) சர்வதேச அளவில் 2030ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.அதே நேரத்தில், 2025ஆம் ஆண்டுக்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்க (TB Free India) இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

### சிறப்புத்திட்டம்:

- காசநோயை ஒழிப்பதற்குத் தனிச்சிறப்புமிக்க திட்டத்தை இந்தியா செயல்படுத்தியது. 'காசநோய் ஒழிப்பு நண்பர்கள்' (நிக்ஷய் மித்ரா) என்ற அத்திட்டத்தின் மூலமாக காசநோயாளிகள் தத்தெடுக்கப்பட்டனர்.

## விருதுகள்

### நீலகிரி மாவட்டத்துக்கு விருது

- காசநோய் ஒழிப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு மாநாட்டின்போது பிரதமர் மோடி விருதுகளை

வழங்கினார்.

மாநில அளவிலான விருது கர்நாடகத்துக்கும் யூனியன் பிரதேச அளவிலான விருது ஜம்மு-காஷ்மீருக்கும், மாவட்ட அளவிலான விருதுகள் நீலகிரி, புல்வாமா, அனந்த்நாக் ஆகியவற்றுக்கும் வழங்கப்பட்டன.

## இலக்கு

- சர்வதேச அளவில் 2030-ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், காசநோயை 2025-ஆம் ஆண்டுக்குள் ஒழிக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

## வாகன உற்பத்தியில் 3 வது இடம்

- காஷ்மீரில் உள்ள லித்தியத்தை பயன்படுத்தி வாகன உற்பத்தியில் இந்தியா முதலிடத்தை பிடிக்க முடியும் அமைச்சர் நிதின் கட்கரி நம்பிக்கை
- ஆண்டுதோறும் நாம் 1,200 டன் லித்தியத்தை இறக்குமதி செய்கிறோம்.
- தற்போது, காஷ்மீரில் லித்தியம் வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இது 5.9 மில்லியன் டன் அளவுக்கு இருக்கும் என மதிப் பிடப்பட்டுள்ளது.
- மின்சார வாகனங்கள் மற்றும் சோலார் பேனல்கள் தயாரிப்புக்கு லித்தியம் மிக முக்கியமானது.
- இதை நாம் பயன்படுத்தினால், வாகன உற்பத்தி துறையில் இந்தியா முதல் இடத்தை பிடிக்க முடியும்.
- வாகன உற்பத்தியில் இந்தியா கடந்தாண்டு ஜப்பானை பின்னுக்கு தள்ளி 3-வது இடத்தை பிடித்துள்ளது.
- தற்போது இந்திய வாகன தொழிலின் மதிப்பு ரூ.7.5 லட்சம் கோடி ஒட்டு மொத்த ஜிஎஸ்டி வருவாயில் வாகன உற்பத்தி துறையின் பங்களிப்பு மிக அதிகம்.
- நமது புதுமையான அணுகு முறையால், பின்தங்கியுள்ள பகுதிகளில் நாம் வளர்ச்சியை அதிகரித்து வேலைவாய்ப்பையும் உருவாக்க முடியும். இவ்வாறு நிதின் கட்கரி கூறினார்.

## பிரதமரின் 99 ஆவது மனதின் குரல் உரை

## 'நாட்டுக்கு பெருமை சேர்த்த பெண் படைப்பாளர்கள்'

- ஆஸ்கர் விருது பெற்ற 'தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்' ஆவணக் குறும்படத்தின் இயக்குநர் கார்த்திகி கோன் சால்வஸ், தயாரிப்பாளர் குனீத் மோங்கா ஆகியோர்

நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளதாக தனது உரையில் பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார்.

- மேலும், வந்தே பாரத் ரயிலை இயக்கிய முதல் பெண் ஓட்டுநர் சுரேகா யாதவ் (ஆசியாவின் முதல் பெண் ரயில் ஓட்டுநர்), சர்வதேச விருது பெற்ற பாபா அணு ஆய்வு மைய அறிவியலாளர் ஜோதிர்மயி மொஹந்தி, 19 வயதுக்குட்பட்ட பெண்கள் டி–20 கிரிக்கெட் போட்டியில் வென்ற இந்திய அணி, நாகாலாந்தில் முதல்முறையாக தேர்வாகியுள்ள 2 பெண் எம்எல்ஏக்கள், விமானப் படை போர்ப் பிரிவில் கமாண்டராக நியமனம் பெற்றுள்ள முதல் பெண் அதிகாரி ஷாலிஜா தாமி, சியாச்சினில் பணியாற்றும் முதல் பெண் அதிகாரி ஷிவா சௌஹான் உள்ளிட்டோரை குறிப்பிட்ட பிரதமர், 'நாட்டின் வளர்ச்சியில் பெண் சக்தியின் பங்களிப்பு மிகப் பெரியது' என்றார்.

## உறுப்பு தானத்துக்கு ஊக்கம்

- உடல் உறுப்பு தானம் என்பது உயிர்காக்கும் வழி முறையாக மாறியுள்ளது. உறுப்பு தானத்தை ஊக்குவிக்கவும், நடைமுறைகளை எளிதாக்கவும் ஒரே சீரான கொள்கையை வகுக்க அரசு திட்டமிட்டு வருகிறது' என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- நாட்டில் இப்போது உடல் உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வு அதிகரித்து வருவது திருப்தியளிப்பதாக உள்ளது. 2013–இல் உடல் உறுப்பு தானம், 5,000–க்கும் குறைவான அளவில்தான் இருந்தது. ஆனால், 2022–இல் இந்த எண்ணிக்கை 15, 000– ஐ கடந்துள்ளது.
- 'ஒரே சீரான கொள்கை': உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கவும், நடைமுறைகளை எளிதாக்கவும் ஒரே சீரான கொள்கையை வகுக்க அரசு திட்டமிட்டு வருகிறது.
- உடல் உறுப்பு தானம் செய்வதற்கு 65 வயதுக்குள் இருக்க வேண்டுமென்ற வரம்பை நீக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## ஆன்லைன் RTI போர்டல்

- உச்ச நீதிமன்றம் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் (UTS) மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு ஆன்லைன் RTI போர்டல்களை அமைக்க மூன்று மாத கெடுவை வழங்கியுள்ளது .

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) 2005க்கான ஆன்லைன் இணையதள போர்டல் இன்னும் சில உயர் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்படாமல் உள்ளதை சுட்டிக்காட்டி உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.
- RTI, 2005 இன் பிரிவு 6(1) ஒரு தகவல் தேடுபவருக்கு மின்னணு வழிமுறைகள் மூலம் விண்ணப்பதற்கான சட்டப்பூர்வ உரிமை உள்ளது. இருப்பினும், பல உயர் நீதிமன்றங்கள் மற்றும் பெரும்பாலான மாவட்ட நீதிமன்றங்கள் RTI விண்ணப்பங்களை மட்டுமே வழங்குகின்றன.
- சமீபத்தில், உச்ச நீதிமன்றம் மற்றும் மத்தியப் பிரதேசம், ஒடிசா மற்றும் டெல்லியில் உள்ள சில உயர் நீதிமன்றங்கள், தகவல்களை வழங்குவதற்கான கோரிக்கைகளை எளிதாக்கும் ஆன்லைன் போர்ட்டலை அமைத்துள்ளன.
- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, பொது அதிகாரிகளிடம் இருந்து தகவல்களைப் பெற குடிமக்களுக்கு அதிகாரம் அளிக்கிறது மற்றும் அத்தகைய கோரிக்கைக்கு 30 நாட்களுக்குள் பதிலளிப்பது கட்டாயமாகும்.

## மத்திய அரசு குனோ தேசிய பூங்காவில் கிர் சிங்கங்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

### கிர் தேசிய பூங்கா பற்றி:

- கிர் தேசிய பூங்கா மற்றும் வனவிலங்கு சரணாலயம் குஜராத்தின் ஜூனாகத் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- கிர் காடுகள் ஆசிய சிங்கங்களின் ஒரே இயற்கை வாழ்விடமாகும் (IUCN சிவப்பு பட்டியல்: அழிந்து வரும் இனம் )
- கிர் காடுகள் இந்தியாவின் அரை வறண்ட மேற்குப் பகுதியில் உள்ள வறண்ட இலையுதிர் காடுகளின் மிகப்பெரிய சிறிய பகுதி ஆகும்.

## SCO நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்களின் கூட்டத்தை இந்தியா நடத்த உள்ளது.

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் (SCO) கூட்டத்தை இந்தியா நடத்தவுள்ளது.

### SCO பற்றி:

- SCO என்பது நிரந்தர அரசுகளுக்கிடையேயான சர்வதேச அமைப்பாகும்.
- இது 2001 இல் உருவாக்கப்பட்டது.

- இது ஒரு யூரேசிய அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ அமைப்பாகும், இது பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 இல் SCO உச்சி மாநாட்டை இந்தியா நடத்துகிறது.
- உறுப்பு நாடுகள்: கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான்.
- தலைமையகம்: பெய்ஜிங், சீனா
- இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த காங்க்ரா தேயிலைக்கு ஐரோப்பிய விவசாய சங்கம் சார்பில் ஐரோப்பிய புவியியல் குறியீட்டை (GI) வழங்கியுள்ளது .
- இது தேயிலை ஒரு குறிப்பிட்ட பகுதியில் விளையும் பொருட்களை அங்கீகரிக்கும் முக்கியமான சான்றிதழாகும்.
- பொதுவாக இது அதன் தோற்ற இடத்தின் அடிப்படையில், பெயர் தரம் மற்றும் தனித்துவத்தின் உத்தரவாதத்தை வழங்குகிறது.
- இந்தியாவில், காங்க்ரா தேநீர் 2005 இல் புவியியல் குறியீட்டிற்கான அங்கீகாரத்தைப் பெற்றது.

### அரிய வகை நோய் மருந்துகளுக்கு இறக்குமதி வரிவிலக்கு

- அரிய நோய்களுக்கான தேசியக் கொள்கை, 2021ன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து வகை அரிய நோய்களுக்கும் சிகிச்சைக்கான சுங்க வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.
- இந்த விலக்கு ஏப்ரல் 2023 முதல் அமலுக்கு வரும்.
- மருந்துகளுக்கு பொதுவாக 10% அடிப்படை சுங்க வரி விதிக்கப்பட்டு வருகிறது , அதே சமயம் சில வகை உயிர்காக்கும் மருந்துகள்/தடுப்பூசிகள் 5% இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது

### அரிதான நோய்களுக்கான தேசியக் கொள்கை, 2021:

- ஒருங்கிணைந்த மற்றும் விரிவான தடுப்பு மூலோபாயத்தின் அடிப்படையில் அரிதான நோய்களின் பரவலைக் குறைப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அரிதான நோய்களுக்கான தேசியக் கொள்கை, 2021, அரிதான நோய்களுக்கான சிகிச்சை முறைகள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்நுட்ப பரிமாற்றம்

மற்றும் அரிய நோய்களுக்கான சிகிச்சை முறைகளை உள்நாட்டில் உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான ஆணையை வழங்குகிறது.

## சர்வதேச நிகழ்வு

### நார்ட் ஸ்ட்ரீம் குழாய்கள் தகர்க்கப்பட்டதில் உக்ரைனுக்கு தொடர்பு : அமெரிக்க ஊடகம்

- ரஷியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இயற்கை எரிவாயுவை எடுத்துச் செல்வதற்காக பால்டிக் கடலடியில் பதிக்கப்பட்டிருக்கும். நார்ட் ஸ்ட்ரீம் –1, நார்ட் ஸ்ட்ரீம் –2 ஆகிய இரு குழாய்களில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் திடீரென கசிவு ஏற்பட்டது.
- இதனால் எரிவாயு விநியோகம் தடைபட்டு, பல ஐரோப்பிய நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.
- இந்த நிலையில், உக்ரைன் ஆதரவாளர்களால்தான் அந்த எரிவாயு குழாய்கள் உடைக்கப்பட்டதாக தற்போது அமெரிக்க ஊடகம் தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### 'ஆக்கஸ்' கூட்டணி

- இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில், ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தியில் இயங்கும் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்குவதற்கான திட்டத்துக்கு அமெரிக்கா–பிரிட்டன்–ஆஸ்திரேலியா இடையிலான 'ஆக்கஸ்' கூட்டணி ஒப்புதல் வழங்கியுள்ளது.

### AUKUS பற்றி:

- AUKUS, ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா இடையே ஒரு முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் ஆகும்.
- இந்தோ–பசிபிக் பிராந்தியத்திற்கு 15 செப்டம்பர் 2021 அன்று அறிவிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெறுவதற்கு அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஆஸ்திரேலியாவுக்கு உதவும்.

## தமிழ்நாடு நிகழ்வுகள்

### ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி, வெளிநாட்டுச் சுற்றுலா

- அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி, வெளிநாட்டுச் சுற்றுலாவுடன், மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்யப்படும் போன்ற புதிய திட்டங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

- ரூ. 225 கோடியில் இந்தத் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வரும் என அவர் அறிவித்தார்.
- நான் முதல்வன் திட்டம், மாணவ, மாணவிகளை முதன்மையானவர்களாக உருவாக்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம்.
- உயர் கல்வியை மாணவியர் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாதந்தோறும் ரூ. 1,000 வழங்கும் திட்டமே புதுமைப் பெண் திட்டம்.
- அரசுப் பள்ளியில் படித்தவர்கள் தொழிற்கல்வியில் சேர 7.5 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. காலையில் பள்ளி மாணவர்களின் பசியைப் போக்கி அவர்கள் படிப்பதற்கு வசதியாக, முதல்வரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

### கைக்கணினி, முழு உடல் பரிசோதனை உட்பட அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.225 கோடியில் புதிய திட்டங்கள்

- அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு கைக்கணினி, 3ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை உட்பட ரூ.225 கோடியில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

### தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோராக மாற்றும் திட்டம்

- சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் குப்பை சேகரிப்பவர்களை தொழில் முனைவோர்களாக ஆக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- மாநகராட்சி சார்பில் மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய 'சஃபாய் கரம்சாரி' நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### சென்னையில் பரவி வருவது "இன்ஃப்ளுயன்ஸா-ஏ" வகை தொற்று

- சென்னையில் அண்மைக்காலமாக பரவி வரும் காய்ச்சல் இன்ஃப்ளுயன்ஸா-ஏ வகை வைரஸ் தொற்று என்பது பொது சுகாதாரத்துறையின் ஆய்வு முடிவுகளில் தெரியவந்துள்ளது.
- அதற்கு அடுத்தபடியாக நுரையீரலில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆர்எஸ்வி வைரஸ் தொற்று பரவலாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இவ்விரு வைரஸ் தொற்றுகளும் பருவகாலத்தில் வழக்கமாக பரவும் ஒசல்டா மிவிர் எனப்படும் வைரஸ் எதிர்ப்பு மருந்து வழங்கலாம்.

## தாய்மார்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை விநியோகம்

- தேசிய குடற்புழு நீக்க நாள் ஆண்டுதோறும் பிப்ரவரி 10, ஆகஸ்ட் 10 ஆகிய தேதிகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 19 வயதுக்குட்பட்ட குழந்தைகள், சிறாருக்கு 'அல்பெண்டசோல்' எனப்படும் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படுவது வழக்கம்.
- பெண்கள், தாய்மார்களுக்கும் விரிவுபடுத்தியிருப்பதாக பொது சுகாதாரத் துறை இயக்குநர் தெரிவித்தார்.
- ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்களில் அந்த மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- குடற்புழு நீக்கத்தால் ரத்த சோகை பாதிப்பு நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும், வலிமையும் மேம்படும்.
- அரசு பள்ளி மாணவர்களுக்கு அல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## தேர்தல் ஆணையர்களை நியமிக்க பிரதமரை உள்ளடக்கிய குழு

- இந்திய தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் தலைமைத் தேர்தல் ஆணையர், மற்ற தேர்தல் ஆணையர்களை நியமிக்க பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரைக் கொண்ட பரிந்துரைக் குழுவை அமைத்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- **பரிந்துரைக் குழு:** தேர்தல் ஆணையர்களை நியமிப்பது தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் 324-ஆவது பிரிவு குறிப்பிடுகிறது.
- தலைமைத் தேர்தல் ஆணையரையும் மற்ற தேர்தல் ஆணையர்களையும் குடியரசுத் தலைவரே நியமிப்பார். அதே வேளையில், ஆணையர்கள் நியமனத்துக்கான பரிந்துரைக் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி இடம்பெறுவர். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவி காலியாக இருக்கும்பட்சத்தில், எதிர்க்கட்சியில் அதிக இடங்களைக் கொண்ட கட்சியின் தலைவர் குழுவில் இடம் பெறுவார்.

## சமூகத்தில் காலநிலை மாற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த காலநிலை அறிவு இயக்கம் விரைவில் தொடக்கம்

- நிர்வாக குழு கூட்டத்தில் அறிவித்த முதல்வர் ஸ்டாலின், காலநிலையை பாதிக்குமா என்று ஆய்வு செய்த பிறகே திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.
- சமூகத்தின் அனைத்து தரப்பினரிடமும் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த விரைவில் 'காலநிலை அறிவு இயக்கம் செயல்படுத்த உள்ளது என்று, காலநிலை மாற்ற நிர்வாக குழுவின் முதல் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

## நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான விழிப்புணர்வு

- தமிழக அரசின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு சமூக ஊடகங்கள் வழியாக மேற்கொள்ளும் திட்டத்தை சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- மக்கள், வளம், புவிக்கோள், அமைதி மற்றும் கூட்டாண்மை ஆகிய அம்சங்களே நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து அடிப்படைக் கொள்கைகளாகும்.

## கிராம மக்களின் வருவாய்க்கு முக்கியத்துவம்

- கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.
- "கள ஆய்வில் முதல்வர்" திட்டத்தின் கீழ், ஆட்சியர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.
- இந்த அரசின் முக்கியமான புதிய திட்டங்கள் அனைத்திலும் ஓங்கி ஒலிப்பது சமூக நீதியின் குரலாகவே இருக்கும்.. அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சி, இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு, பெண் கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தமிழ் மொழியின் தொன்மைகளைப் போற்றிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லுதல் போன்ற பணிகளுக்கு அரசின் புதிய திட்டங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
- கிராமப்புற மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும், வாழ்வாதாரத்தை உயர்த்தவும், செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்சிசித் திட்டம் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட வேண்டும். வேலை உறுதித் திட்டத்தின் கீழ், வேலை

வழங்கப்படக்கூடிய சராசரி நாள்களை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

## "நான் முதல்வன்" திட்டத்தில் போட்டித் தேர்வு பிரிவு

- "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், போட்டித் தேர்வுப் பிரிவை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின், செவ்வாய்க்கிழமை தொடங்கி வைக்கவுள்ளார்.
- நான் முதல்வன் திட்டத்தின் கீழ், போட்டித் தேர்வுகளட பிரிவு தொடங்கப்படுவதன் மூலம் ரயில்வே, வங்கி, டி.என்.பி.எஸ்.சி, யு.பி.எஸ்.சி உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தமிழ் நாடு முழுவதும் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்தத் திட்டம் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தொடங்கப்படவுள்ளது.

## சமூக நீதிதான் திராவிட இயக்கத்தின் ஒரே குறிக்கோள்

- தமிழகத்தின் சமூக நீதி வரலாற்றில் வீரம் மிகுந்த போராட்டங்களில் ஒன்றான தோல்சீலை போராட்டத்தின் 200 –ஆவது ஆண்டு நிறைவு
- தமிழ்ச் சமூகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டில் செழித்து நின்றதை யாரும் மறுக்க முடியாது. அதைத் தான் நமக்கு "கீழடி" வெளிப்படுத்தியுள்ளது.
- அருட்பிரகாச வள்ளலார், அய்யா வைகுண்டர், அயோத்திதாச பண்டிதர், பெரியார் ஆகியோர் நடத்திய சீர்திருத்த இயக்கங்கள்தான் தமிழகத்தை தலைநிமிரச் செய்துள்ளன. பக்தி வேறு– பாகுபாடு வேறு என்பதை உணர்த்தியவர்கள் இந்தத் தலைவர்கள்.

## ஊரக வேலை உறுதித் திட்டம்

## குடும்பத் தலைவர் பெண்களுக்கு கூடுதலாக 50 நாள்கள் பணி

- ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், குடும்பத் தலைவர்களாக உள்ள பெண்களுக்கு கூடுதலாக 50 நாள்கள் வேலை தரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- சட்டம் 2005
- அமைச்சகம் கிராமப்புற மேம்பாடு அமைச்சகம்
- நோக்கம்: கிராமப்புறங்களில் திறன்சாரா பணியாளர்களுக்கு 100 நாள் வேலைவாய்ப்பு

## மாணவர்களுக்கான சிறார் திரைப்படத் திருவிழா

## அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கி வைத்தார்

- அரசுப் பள்ளி மாணவர்களுக்கான சிறார் திரைப்படத் திருவிழா சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் தொடங்கியது.
- இதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.
- தமிழக அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாதந்தோறும் சிறார் படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. அந்த படங்கள் தொடர்பாக விமர்சனக் கட்டுரை எழுதுதல், ஒரு காட்சியை நாடகமாக நடித்தல், சுவரொட்டி வரைதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்பட்டன.
- இந்த விழாவில் மாணவர்களுக்கு படங்கள் திரையிடுதல், குறும்படப் பயிற்சி, பிரபல இயக்குநர்களுடன் கலந்துரையாடல், கதை எழுதுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பார். அதில் சிறந்து விளங்கும் 25 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.

## இணையவழி சூதாட்ட தடைச் சட்டம் தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை

## மசோதாவை திருப்பி அனுப்பினார் ஆளுநர்

- 'ஆன்லைன் ரம்மி' போன்ற இணையவழி சூதாட்டத்துக்கு தடை விதிக்கும் வகையில் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை தமிழக அரசுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பினர்.
- ஆன்லைன் ரம்மி போன்ற விளையாட்டுகள் மத்திய தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் வருவதால், அவற்றைத் தடை செய்து சட்டம் இயற்றுவதற்கு தமிழக சட்டப்பேரவைக்கு அதிகாரம் இல்லை என ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இணையவழி சூதாட்டத்தை தடை செய்வது மற்றும் இணைய வழி விளையாட்டுகளை முறைப்படுத்துவது தொடர்பாக ஆய்வுசெய்வதற்கு ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் தமிழக அரசால் குழு அமைக்கப்பட்டது.**தமிழகத்தில் 4 லட்சம் மாணவ. மாணவிகளுக்கு பல் பாதுகாப்பு திட்டம் தொடக்கம்**
- முதல் கட்டமாக 54 ஆயிரம் பேருக்கு பரிசோதனை

- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னையில் "புன்னகை சிறார்களின் பல் பாதுகாப்புத் திட்டம்" தொடங்கப்பட்டது.

### செயற்கை மணல் உற்பத்தியை ஒழுங்குபடுத்த புதிய கொள்கை

- முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்
- கட்டுமானப் பணிகளில் ஆற்று மணலுக்கு மாற்றாக சமீபகாலமாக எம்.சாண்ட் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இந்நிலையில், தரமற்ற எம்-சாண்ட் விற்பனையைத் தடுக்கவும், கண்காணிக்கவும், தயாரிப்பு, தரம், விலை உள்ளிட்டவற்றை வரன்முறைப்படுத்தவும் மாநில அளவில் கொள்கை தேவைப்படுகிறது.
- எனவே, எம்-சாண்ட் உற்பத்தியை ஒழுங்குபடுத்த புதிய கொள்கையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இதை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

#### கொள்கையின் குறிக்கோள்:

- ஆற்றுமணலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கு மாற்றாக செயற்கை மணல் (எம்-சாண்ட்) அல்லது அரவை மணல் (சி-சாண்ட்) உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது.
- குவாரி செயல்பாட்டின்போது பயன்பாட்டுக்கு உதவாத கற்களில் இருந்தும், சிறிய அளவிலான கிரானைட் கற்களில் இருந்தும் இவை தயாரிக்கப்படுவதால், குவாரிகளில் ஏற்படும் கழிவுகளின் அளவைக் குறைக்க முடியும். மாநிலத்தில் குவாரிக் கழிவுகளே இல் லாத நிலையை உருவாக்குவதே இந்தக் கொள்கையின் குறிக்கோளாகும்.
- ஆற்றுமணலைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதன் மூலம், சுற்றுசூழலுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுத்தல், அதிக வலிமை மற்றும் செலவு குறைந்த செயற்கை மணல் பயன்பாட்டை ஊக்குவித்தல், தமிழகத்தில் உள்ள செயற்கை மணல் உற்பத்தி தொழிற் சாலைகள் தொடர்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை முறையாகப் பின்பற்றச் செய்தல் ஆகியவை

### இணைநோய்களில்லாத 53 % பேருக்கு சிறுநீரக செயலிழப்பு

- தமிழகத்தில் இணை நோய்களின் தாக்கம் இல்லாத 53 சதவீதம் பேருக்கு நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு பாதிப்பு இருப்பது மக்கள் நல் வாழ்வுத் துறை ஆய்வில் தெரிய வந்துள்ளது.

- பாதிப்புக்குள்ளானோரில் பெரும்பாலோர் விவசாயம், கட்டுமானம் உள்ளிட்ட முறை சாரா பணிகளில் ஈடுபடுவோர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## 6 பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு நிரந்தர தடை

- பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தி தற்கொலை செய்வோர் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.
- தற்கொலையை தடுக்கும்நோக்கில் 6 பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு நிரந்தர தடைவிதித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 6 பூச்சிக்கொல்லிகள்

- **மோனோக்ரோபாஸ்**
- **ப்ரோபினோபாஸ்**
- **செப்கேட்**
- **சைபர்மெத்ரின் கலந்த ப்ரோபினோபாஸ்**
- **க்ளோர்பிரிபாஸ்**

## புதிய இந்திய எழுத்தறிவு திட்டம் (NILP)

- புதிய பாரத் எழுத்தறிவு திட்டத்தின் கீழ் 5.28 லட்சம் பேருக்கு கல்வி.
- தமிழகத்தில், பள்ளிக் கல்வித்துறை சார்பில், புதிய இந்தியா எழுத்தறிவு திட்டத்தின் கீழ், 5,28,000 மாணவ, மாணவியர் படிக்கின்றனர். அவர்களுக்கு 28,848 தன்னார்வலர்கள் கற்பிக்கின்றனர்.
- பள்ளிக் கல்வித் துறையின் முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குனரகம், புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டத்தின் மூலம், 15 வயதுக்கு மேற்பட்ட எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு அடிப்படை கல்வியறிவு, எண்ணியல் மற்றும் வாழ்க்கைத் திறன்களை வழங்கி வருகிறது.

### NILP 2022 பற்றி:

- தேசிய கல்விக் கொள்கை 2020 உடன் இணைவதற்கு வயது வந்தோருக்கான கல்வியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது
- "வயது வந்தோர் கல்வி" என்ற சொல் "அனைவருக்கும் கல்வி" என்று மாற்றப்படும்.
- குறிக்கோள்:
- அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணியல் அறிவை மட்டுமல்லாமல், 21 ஆம் நூற்றாண்டின் குடிமகனுக்குத் தேவையான பிற கூறுகளையும் வழங்குதல்.
- ஆன்லைன் முறையில் தன்னார்வத் தொண்டு மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை வெளியீடு

## இணையதளம் மூலம் நஞ்சில்லா பொருள்கள் விநியோகிக்க இலக்கு

- இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்த வேளாண்மைத் துறையில் தனியாக ஒரு பிரிவு உருவாக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.
- அதன்படி, முதல் முறையாக வெளியிடப்பட்ட வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், அங்கக வேளாண்மைக்கான தனிக் கொள்கை குறித்த அறிவிப்பு செய்யப்பட்டது. அங்கக வேளாண் கொள்கையை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- தேசிய அளவில் அங்கக வேளாண்மையில் தமிழ்நாடு 14-ஆவது இடத்தில் உள்ளது. 2020-21-ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 223 மெட்ரிக் டன் அங்ககப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூ.108 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

### கொள்கையின் நோக்கங்கள்:

- அங்கக வேளாண்மைக் கொள்கை சில முக்கிய அம்சங்களை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. மண்வளம், வேளாண் சூழலியல், பல்லுயிர்ப் பெருக்கம் ஆகியவற்றை பாதுகாத்து, நிலைத்திருக்கச் செய்வது, பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உணவை வழங்குதல் ஆகியன நோக்கங்களாகும்.
- சந்தை, சான்றிதழ் ஆலோசனைகளை வழங்குதல், ஏற்றுமதியை ஊக்குவித்தல், விவசாயிகளின் வருவாய் அதிகரித்தல் போன்றவையும் முக்கிய கொள்கைகளாகும்.
- அங்கக வேளாண்மைக்கு பயிர்க் கடன் வழங்குவது அரசால் ஊக்குவிக்கப்படும். இயற்கை பேரிடர்களால் ஏற்படும் பயிர் இழப்பு, சேதங்களுக்கு பயிர்க் காப்பீடு மூலம் உதவி அளிக்கப்படும். உயிர் உரங்கள், உயிர் பூச்சிக் கொல்லிகள், உயிரியல் கட்டுப்பாட்டுக்குக் காரணிகள் ஆகியவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு அதற்கான உதவிகள் அளிக்கப்படும். அங்கக வேளாண்மையில் சான்றிதழ் வழங்கும் நடைமுறை முக்கியமான அம்சமாகும். சான்றிதழ் நடைமுறையை எளிதாக்க ஒற்றைச் சாளர முறை செயல்படுத்தப்படும். விவசாயிகளின் பதிவு, சான்றளிப்பு, விரிவான தரவுதளத்தைப் பராமரித்தல் ஆகிய பணிகள் இணையதளம் மூலமாகவே மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும்.

## கால்நடை கோழி வளர்ப்பு:

- அங்கக வேளாண் சான்றளிப்பின் ஒருபகுதியாக கால்நடை, கோழி, தேனீ, மீன், காளான் வளர்ப்புகள், பசுமைக்குடில் சாகுபடி ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களுக்கும் அங்கக சான்றளிப்புத் துறையின் சான்றிதழ் அளிக்கப்படும்.
- தமிழ்நாட்டில் வாய்ப்புள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளில் அங்கக காய்கறித் தோட்டங்கள், பழத் தோட்டங்களை அமைப்பதற்கான முறை உருவாக்கப்படும்.

## உணவுத் திருவிழாக்கள்:

- ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அங்கக உணவுத் திருவிழாக்கள் நடத்தப்படும்.

## மின் வணிகம்:

- வேளாண் அங்கக பொருள்களை விநியோகம் பல்வேறு வழிகளில் செய்யப்படும். மின் வணிகம், இணையதளம், தேசிய மின்னணு வேளாண் சந்தை, கைப்பேசி செயலிகள், சந்தைத் தளங்கள் ஆகியவற்றின் வாயிலாக அங்ககத் தயாரிப்புகள் சந்தைப்படுத்தப்படும்.

## ஆரோக்கிய உணவு உறுதியாகும்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

- மனிதன் மட்டுமல்லாது, கால்நடைகளின் ஆரோக்கியத்துக்கு நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதற்கும், இயற்கை முறையில் உற்பத்தியாகும் வேளாண் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், பல்வேறு உத்திகளை கண்டறிந்து அங்கக வேளாண்மை கொள்கையை தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது. இது இயற்கை வேளாண் வரலாற்றில் மிக முக்கியமானதாகும்.
- இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த அனைத்து வகை உதவிகளையும் விவசாயிகளுக்கு அரசு செய்யும், இந்தக் கொள்கை தமிழ்நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமான உணவை வழங்குவதை உறுதி செய்யும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

## நமக்கு நாமே திட்டத்தில் மக்கள் விரும்பும் பணிகளைச் செயல்படுத்தலாம்

- சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் பங்களிப்பில் 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் மக்கள் தாங்கள் விரும்பும் திட்டப்பணிகளை மேற்கொள்ளலாம்.

- நகர்ப்புறப் பகுதிகளின் வளர்ச்சிக்காக நமக்கு நாமே திட்டமானது, அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி, பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இதற்கு குறிப்பிட்ட அளவு நிதி பங்களிப்பை அளிக்கும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு தமிழ்நாடு முதல்வரின் சிறப்பு விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் வகையில் ரூ.300 கோடி மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**நமக்கு நாமே திட்டம் பற்றி:**

- தொடக்கம்: 1997-1998
- மறுதொடக்கம் 2021

**இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

(1) தகவல் தொழில்நுட்ப மாநாட்டின் ஒருபகுதியாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இரண்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
அதன்படி, தாட்கோ மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனத்துக்கு இடையே திறன் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் செய்யப்பட்டது.
இதனால், 6 ஆயிரம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் அளிக்கப்படும்.

(2) இதேபோன்று, தொழில்நுட்ப வளர்ச்சி மையம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனத்துக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம், வேலைவாய்ப்பு, ஆசிரியர் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது

**ICT அகாடமி பற்றி:**

ICT அகாடமி என்பது மாநில அரசுகள் மற்றும் தொழில்துறைகளுடன் இணைந்து இந்திய அரசின் ஒரு முயற்சியாகும்.

இது ஒரு இலாப நோக்கற்ற சமூகமாகும், இது பொது-தனியார்-கூட்டாண்மை (பிபிபி) மாதிரியின் கீழ் முதல் முன்னோடி முயற்சியாகும், இது உயர்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க முயற்சிக்கிறது.

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – வருகை அதிகரிப்பு

- தமிழகத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள 1,543 அரசுப் பள்ளிகளில், 1,319 பள்ளிகளில் ஜூன் – ஜூலை 2022 உடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது.இந்த அறிக்கை மாநில திட்டக்குழுவால்ஆய்வு செய்யப்பட்டது.

### திட்டம் பற்றி

- தமிழக அரசு இந்த திட்டத்தை செப்டம்பர் 15, 2022 அன்று அறிமுகப்படுத்தியது.
- இத்திட்டத்தின் கீழ், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்படும்.
- மதுரை சிம்மக்கல்லில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## எண்ணும் எழுத்தும் திட்டம்

- தமிழகம் முழுவதும் எண்ணும் எழுத்தும் திட்டம் குறித்த விழிப்புணர்வு இயக்கம்
- .அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கான அதன் முயற்சிகளின் ஒரு பகுதியாக, பள்ளிக் கல்வித் துறையானது, மார்ச் மாதத்தில் எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை இலக்காகக் கொண்ட அதன் அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணியல் திட்டம் (எண்ணும் எழுத்துத் திட்டம்) குறித்த விழிப்புணர்வைத் தொடர் நிகழ்ச்சிகள் மூலம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளும்.

### திட்டம் பற்றி:

- ஜூன் 17,2022 அன்று தொடங்கப்பட்டது
- நோக்கம்: 2025 ஆம் ஆண்டுக்குள் 8 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவை உறுதி செய்வது.
- திருவள்ளூர் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கப்பட்டது.
- பசுமையான, சுயமாக இயங்கும் உப்புநீக்கும் ஆலையை NIOT லட்சத்தீவில் அமைக்கவுள்ளது.

## NIOT பற்றி:

- தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) நவம்பர் 1993 இல் நிறுவப்பட்டது.
- அமைச்சகம் – இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகம்
- NIOT இன் நோக்கம் இந்தியாவின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பில் உள்ள இந்திய பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் (EEZ) உயிரற்ற மற்றும் உயிர் வளங்களை அறுவடை செய்வது தொடர்பான பல்வேறு பொறியியல் சிக்கல்களைத் தீர்க்க நம்பகமான உள்நாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்குவதாகும்.
- தலைமையகம்: சென்னை, தமிழ்நாடு.
- பேங்க் ஆப் பரோடா, மாநில அரசின் 'புதுமைப் பெண்' திட்டத்தின் பயனாளிகளுக்கு டெபிட் கார்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த அட்டை ஆண்டுக்கு ரூ.2 லட்சம் வரை தனிநபர் விபத்துக் காப்பீட்டை வழங்குகிறது மேலும் முதல் ஆண்டுக்கான சேர்க்கை மற்றும் வருடாந்திர கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

## திட்டம் பற்றி:

- தொடக்கம்: செப்டம்பர் 15, 2022 .
- நோக்கம்: அரசுப் பள்ளிகளிலிருந்து உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிப்பது.
- இத்திட்டத்தின் மூலம் பட்டப் படிப்பு முடியும் வரை ஒரு பெண்ணுக்கு மாதம் ரூ. 1,000 வழங்கப்படும்.

## மகளிர் காவலர் பொன்விழா ஆண்டு

- மகளிர் காவலர் பொன்விழா ஆண்டு தமிழ்நாட்டில் 1973 ம் ஆண்டு முதன் முறையாக பெண் காவலர்கள் காவல் பணியில் சேர்க்கப்பட்டனர் இதன் பொன்விழா ஆண்டை முன்னிட்டு மாநிலத்தில் பெண் காவலர்களின் நலனுக்காக 9 திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- இந்த திட்டங்களில் காவல் வருகை அணிவகுப்பு நேரம் மாற்றம், காவல் நிலையங்களில் பெண் பணியாளர்களுக்கு தனி கழிப்பறைகள் அமைத்தல், அவர்களின் குழந்தைகளை பராமரிக்க குழந்தை காப்பக வசதிகள், சென்னை மற்றும் மதுரையில் உள்ள பிரத்யேக மகளிர் விடுதிகள் மற்றும் காவல்துறையின் கலைஞர் செயல்திறன் ஆண்டு விருது உள்ளிட்ட 9 அறிவிப்புகள்.

### "அவள் திட்டம்":

- 8.5 கோடியில் பெண்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கும் அவள் திட்டத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ் குறைந்தது 50,000 பெண்களுக்கு தற்காப்பு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

### TN எத்தனால் கலப்பு கொள்கை

- தமிழ்நாடு எத்தனால் கலப்புக் கொள்கை (EBP) 2023, தொழில் துறையால் வெளியிடப்பட்டது.

### கொள்கை பற்றி:

- சர்க்கரை ஆலைகளை வெல்லப்பாகு அடிப்படையிலான எத்தனால் ஆலைகளாக அமைக்கவும், திறன் பயன்பாட்டை மேம்படுத்தவும் அரசு ஊக்குவிக்கும்.
- எண்ணெய் விற்பனை நிறுவனங்கள் (OMCs), தற்போது, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து எத்தனாலை பெறுகின்றன.
- தற்போது, OMC கள் மாநிலத்தில் 12% எத்தனாலை பெட்ரோலுடன் கலக்கின்றன.
- 2025 ஆம் ஆண்டிற்குள் இதை 20% ஆக அதிகரிக்கவும், முனையங்களில் சேமிப்பு திறனை அதிகரிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகம் (CGD) கொள்கை 2023

- மாநில அரசு தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை 2023 ஐ வெளியிட்டது.
- தமிழ்நாட்டில், 38 மாவட்டங்களும் CGD நெட்வொர்க்குடன் இணைக்கப்பட உள்ளன, இதன் மூலம் சுமார் 2.28 கோடி PNG இணைப்புகள் மற்றும் சுமார் 2,785 CNG நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன.

### லாஜிஸ்டிக்ஸ் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த லாஜிஸ்டிக்ஸ் திட்டம் 2023:

- தமிழ்நாடு அரசு லாஜிஸ்டிக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த தளவாடத் திட்டம் 2023ஐ வெளியிட்டுள்ளது.
- தமிழ்நாடு லாஜிஸ்டிக்ஸ் கொள்கை 2023 இன் பார்வை, "மேம்பட்ட போட்டித்திறன் மற்றும் விரைவான பொருளாதார வளர்ச்சிக்காக மாநிலத்தில் ஒருங்கிணைந்த, நம்பகமான, செலவு குறைந்த மற்றும் நிலையான தளவாட அமைப்பை மேம்படுத்துவது " ஆகும்.

- தமிழ்நாடு ஒருங்கிணைந்த லாஜிஸ்டிக்ஸ் திட்டம் (TNILP), 2023, அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஒரு மூலோபாய திட்டத்தை உள்ளடக்கியது.
  மாநிலத்தில் தளவாடங்கள் (ஏற்றுமதி இறக்குமதி மற்றும் உள்நாட்டு சரக்கு) செலவைக் குறைப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழகத்தில் காசநோய் பாதிப்பு இந்த ஆண்டு 5 சதவீதம் குறைந்துள்ளதாக தேசிய சுகாதாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- கடந்த ஆண்டு இதே காலத்தில் 20,026 வழக்குகள் கண்டறியப்பட்டு, நடப்பு ஆண்டில் 19,181 ஆகக் குறைந்துள்ளது.

## தமிழ்நாடு காசநோய் இறப்பில்லா திட்டம்

- காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் இறப்பு விகிதத்தைக் குறைக்க தமிழ்நாடு மாநிலம் முழுவதும் முன்னோடியாக உள்ளது.

### திட்டம் பற்றி:

- முன்முயற்சி – TNKET (தமிழ்நாடு காசநோய் இறப்பில்லா திட்டம்) – இது ஏப்ரல் 2022 இல் 30 மாவட்டங்களில் காசநோயைக் கண்டறிந்த 2, 500 பொது சுகாதார மையங்களில் தொடங்கியது.
- அறிவிக்கப்பட்ட காசநோயாளிகளின் காசநோய் இறப்புகளில் கிட்டத்தட்ட 70% நோயறிதலுக்குப் பிறகு முதல் இரண்டு மாதங்களில் நிகழ்கின்றன.
- இந்த முயற்சியின் மையக்கரு 'வேறுபட்ட காசநோய் சிகிச்சை'
- நோக்கம்: காசநோய் உள்ளவர்களுக்கு நோயறிதலின் போது கடுமையான நோயை நிர்வகிக்க ஆம்புலேட்டரி பராமரிப்பு அல்லது சுகாதார நிலையத்தில் அனுமதி தேவையா என்பதை மதிப்பீடு செய்தல்

## கூட்டுறவு வங்கிகளில் (IMPS) வசதி

- மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் (DICS) டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்காக உடனடி பணப்பரிமாற்ற வசதியை (IMPS) அறிமுகப்படுத்தியுள்ளன.
- நாட்டிலேயே கூட்டுறவு வங்கியில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்ட முதல் மாநிலம் தமிழகம்.
- தமிழகம் முழுவதும் 54 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 23 கிளைகள் உள்ளன.

- இந்த வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு இணைய வங்கி மற்றும் மொபைல் வங்கி சேவைகளை வழங்குகின்றன.
- முக்கிய வங்கித் தீர்வுகள், நிகழ்நேர மொத்த தீர்வு (RTGS) மற்றும் தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (NEFT) போன்ற வசதிகளும் உள்ளன.

## மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் கால கல்வெட்டு கண்டுபிடிப்பு:

- மதுரையை மீட்டு வந்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் பழமையான கல்வெட்டு ஒன்று புதுக்கோட்டை மாவட்ட எல்லையான சிவகங்கை மாவட்டம் சானாவயல் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டத்தின் எல்லையில், சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுக்கா, கொடுவூர் ஊராட்சியில் உள்ள சானாவயல் பெருமாள் மேடு என்ற இடத்தில், உடைந்த பலகைக் கல்வெட்டு ஒன்று, 4 1/2 அடி உயரத்தில், மூன்று பக்கங்களிலும் 114 கோடுகளுடன் உள்ளது. இவற்றில் 103 வரிகள் தெளிவாக உள்ளன.
- கல்வெட்டின் கடைசி பகுதி முற்றிலுமாக சிதைந்த நிலையில் ஸ்ரீ மாஹேஸ்வரர் ரக்ஷை என்று முடிகிறது.

## Umagine chennai 2023

- தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான ஆசியாவின் மிகப்பெரிய உச்சிமாநாடு, இது மார்ச் 23 முதல் 25 வரை சென்னையில் நடக்கிறது.
- Umagine chennai 2023 இல் 12,000 பேர் பதிவு செய்துள்ளனர்.

## ஜி20 மாநாடு: நிதி கட்டமைப்பு செயற்குழு சென்னையில் இன்று தொடக்கம்

- ஜி20 மாநாடு இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில், நிதித் துறை கட்டமைப்பு செயற்குழுக் கூட்டம் சென்னையில் தொடங்கவுள்ளது. நிகழாண்டு ஜி20 மாநாடு, இந்தியா தலைமையில் தில்லியில் வரும் செப்.9, 10 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.
- இதையொட்டி, நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களில் ஆயத்தக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதில் உறுப்பினர்களாக உள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.
- இந்தக் கூட்டத்தில் விலைவாசி உயர்வு, எரிசக்தி சார்ந்த பொருள்கள் பற்றாக்குறை, தட்பவெட்பநிலை, பருவநிலை மாற்றம் மூலம் வரக்கூடிய பொருளாதார தாக்கம் குறித்து ஆலோசனை செய்யப்படவுள்ளது.

## விரைவில் ஆசியாவின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப மையமாக தமிழகம் மாறும்

- ஆசியாவிலேயே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப மையமாக தமிழகம் விரைவில் மாறும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

**இது சம்பந்தமாக முக்கியமான புள்ளிகள்:**

- இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் மாநிலம் 10%க்கும் மேல் பங்களிக்கிறது.
- சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூரில் தமிழ்நாடு தொழில்நுட்ப நகரத்தை (TN Tech City) மாநில அரசு நிறுவ உள்ளது.
- சென்னை ஐடி காரிடாரில் 150 ஏக்கரில் ஒரு டெக் சிட்டியும், ஓசூரில் 500 ஏக்கரில் இரண்டாவதும், கோவையில் மூன்றாவது டெக் சிட்டியும் வருகிறது.
- உலகளாவிய நிறுவனங்கள் தங்கள் திறன் மையங்களை அமைக்க விரும்பும் சிறந்த இடமாக சென்னை தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.
- சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்று வரும் Umagine Chennai 2023 மார்ச் 25 அன்று நிறைவடைகிறது.

## தமிழக பேரிடர் மேலாண்மைக் கொள்கை 2023 வெளியீடு

- தமிழக பேரிடர் மேலாண்மைக் கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- மாநில பேரிடர் மேலாண்மைக் கொள்கை சில முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு வலுவான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளை குறைப்பது, உயிரிழப்பு, பொதுச் சொத்துகள் மற்றும் உள்கட்டமைப்புகளின் சேதங்களை தவிர்ப்பதே கொள்கையின் நோக்கமாகும்.
- மேலும், பலவகை பேரிடர்களுக்கான எச்சரிக்கை அமைப்பு, ஆபத்து, பேரிடர் பாதிப்புகளின் மதிப்பீடு, அபாயம் குறித்த பகுப்பாய்வு, பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான தணிப்பு நடவடிக்கைகள், பேரிடர் அபாயக் குறைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து இணைந்து செயல்படுதல் ஆகியவற்றின் மீது பேரிடர் மேலாண்மைக் கொள்கை கவனம் செலுத்துகிறது.
- பேரிடர்களால் ஏற்படும் இறப்பு, பாதிப்புக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை, நலிந்த பிரிவினருக்கு ஏற்படும் பாதிப்பு, அடிப்படை சேவைகளின் பாதிப்பு, பொருளாதார இழப்பு ஆகியவற்றைக் குறைப்பதற்கு கொள்கையானது முக்கியத்துவம் அளிக்கிறது.

- இத்துடன், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. வெள்ளம், கனாமி, சூறாவளி, வறட்சி, வெப்பக் காற்று, நிலச்சரிவுகள், பூகம்பம், ரசாயன தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள், அணுமின் நிலையங்கள், கதிர்வீச்சுகள் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் பேரிடர் மேலாண்மைத் திட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், குழந்தைகள், மூன்றாம் பாலினத்தவர் ஆகியோருக்கு பேரிடர் காலங்களில் அளிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு
முன்னுரிமைகள் குறித்தும், பல்வேறு துறைகளின் பொறுப்பு மற்றும் பங்களிப்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

## மலைப் பகுதிகளில் தொலைநிலை சிறப்பு மருத்துவ சேவை!

- மக்கள் நல்வாழ்வுத்துறை புதிய முயற்சி தமிழகத்தில் மலைப் பகுதிகள், பின் தங்கிய ஊரகப் பகுதிகளில் உயர் சிறப்பு மருத்துவ சேவைகளை தொலைநிலை முறையில் (டெலி மெடிசன்) வழங்குவதற்கான முயற்சியை மக்கள் நல்வாழ்வுத் துறை முன்னெடுத்துள்ளது.
- தமிழகத்தில் தற்போது 2,227 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.
அவற்றில் 1,800 சுகாதார நிலையங்கள் கிராமப்புறங்களில் அமைந்துள்ளன. இதைத் தவிர 100-க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடிப்படை வசதிகள் குறைந்த பகுதிகளில் உள்ளன. அங்குள்ள மக்கள் மருத்துவ தேவைகளுக்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களையே சார்ந்திருக்கின்றனர்.
- தமிழகத்தில் தொலைத் தொடர்பு சென்றடையாத அனைத்து கிராமங்களுக்கும் அத்தகைய வசதியை வழங்கும் நோக்கில் தமிழ்நாடு கண்ணாடி இழை இணைய சேவை கழக நிறுவனம் (TANFINET) தொடங்கப்பட்டது.
- அதன்கீழ் மலைப் பகுதிகளிலும், மிகவும் பின்தங்கிய கிராமங்களிலும் இணைய சேவை வழங்கப்பட்டு வருகிறது.
- இதைப் பயன்படுத்திக் கொண்டு அதன் வாயிலாக மருத்துவ சேவையின் தரத்தை மேம்படுத்த மக்கள் நல்வாழ்வுத் துறை திட்டமிட்டது.

## தமிழகத்தின் முதல் மிதவை உணவக கப்பல்

- திருப்போரூர் கோவளம் அடுத்த முட்டுக்காட்டில் ரூ.5 கோடியில் தயாராகும் பிரம்மாண்ட 2 அடுக்கு மிதக்கும் உணவக கப்பலின் கட்டுமான பணியை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்.

## முதல்வரின் மூன்று கோரிக்கைகள்

- முதல்வர் மு.க.ஸ்டாலின் மூன்று கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டும் என்று தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்டிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
- சென்னை, மும்பை மற்றும் கொல்கத்தாவில் உள்ள உச்ச நீதிமன்ற கிளை நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதி மற்றும் உள்ளடக்கம் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக ஆங்கிலத்தைத் தவிர்த்து தமிழை ஆக்குதல்.
- பிரிவு 348 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 348, உச்சநீதிமன்றத்திலும், ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திலும் உள்ள அனைத்து நடவடிக்கைகளும் நாடாளுமன்றம் திருத்தாத வரை ஆங்கில மொழியில் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

## தமிழ்நாடு பட்ஜெட் 2023-2024

### தமிழ் வளர்ச்சி, பண்பாடு

1. தாய்த்தமிழைக் காக்க, இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் இன்னுயிர் நீத்த **மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகியோரின் பங்களிப்பைப் போற்றும் வகையில், சென்னையில் நினைவிடம்** ஒன்று அமைக்கப்படும்.
2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையும், முற்போக்கு சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளைப் பரப்புவதற்காக, அவரது படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்படும். இதற்காக அரசால் ஐந்து கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.
3. தொழில்நுட்பத் துறையில், தமிழ் மொழியின் பயன்பாட்டினை அதிகரிப்பதன் மூலம் தமிழ் மொழி உலக மொழியாக வளர்வதற்கு புகழ்பெற்ற வல்லுநர்களைக் கொண்டு '**தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு**' நடத்தப்படும். தமிழ்மொழியில் பெருமளவில் மென்பொருட்கள் உருவாக்கப்படுவதை இது ஊக்குவிக்கும்.

4. கடல் தாண்டி கொடி நாட்டிய தமிழர் பெருமை கூறும் பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்பும் வகையில், **தமிழர் பண்பாட்டுத் தலங்களை இணைக்க தமிழ்ப் பண்பாட்டுக் கடல்வழிப் பயணங்கள் ஊக்குவிக்கப்படும்.**
5. நமது தாய்மொழிக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினை கருத்திற்கொண்டு அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு **கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டையை** அரசு வழங்கி வருகிறது. வரும் ஆண்டில், மேலும், **591 அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு** இச்சலுகையை அரசு வழங்கும்.
6. **சங்கமம், கலை விழா, வரும் ஆண்டில் மேலும் எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.** நாட்டுப்புறக் கலைகளையும், கலைஞர்களையும் பேணி வளர்ப்பதற்கும், தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களின் பகிர்வினைக் கொண்டாடுவதற்கும் நல்வாய்ப்புகளை இவ்விழாக்கள் ஏற்படுத்தும். இதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 11 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.
7. நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இப்பண்பாடு தொடர்ந்து வருங்காலங்களிலும் செழித்தோங்கவும், மாநிலம் முழுவதும் 25 பகுதி நேர நாட்டுப்புறக் கலைப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.
8. **உலகாண்ட சோழர்களின் பங்களிப்பைப் போற்றவும், அக்கால கலைப்பொருட்கள், நினைவுச்சின்னங்களைப் பாதுகாக்கவும், தஞ்சாவூரில் "மாபெரும் சோழர் அருங்காட்சியகம்" ஒன்று அமைக்கப்படும்.**

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு

1. கட்டுமானம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவதைத் தடுக்க ஒரு சிறப்பு முயற்சியைத் தொடங்க உள்ளது. இதன்படி, முதற்கட்டமாக **711 தொழிற்சாலைகளிலுள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் விரிவுபடுத்தப்படும்.** உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களுக்கு முக்கியத்துவம் அளித்து, இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். இத்திட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்களும் பயனடைவார்கள்.
2. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், குடும்பம் ஒன்றிற்கு ஆண்டுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக 11.82 இலட்சம் நோயாளிகளுக்கு 993 கோடி ரூபாய் மதிப்பிலான உயிர்காக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

3. கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் 1,000 படுக்கைவசதி கொண்ட **கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனை இந்த ஆண்டு திறந்து வைக்கப்படும்.**

## பள்ளிக் கல்வி

1. அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்தவும், புதிய கட்டடங்கள் கட்டிடவும் 7,000 கோடி ரூபாய் செலவில் **பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை** அரசு தொடங்கியுள்ளது.
2. **வரும் நிதியாண்டில், புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் என மொத்தம் 1,500 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**
3. '**எண்ணும் எழுத்தும் திட்டமானது**' 2025 ஆம் ஆண்டுக்குள் ஒன்று முதல் மூன்றாம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் அடிப்படை கல்வியறிவும் எண்கணிதத் திறனும் அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
4. இத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பின் அடிப்படையில் **வரும் நிதியாண்டில் 110 கோடி ரூபாய் செலவில் நான்காம் ஐந்தாம் வகுப்புகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.**
5. **சர்வதேச புத்தகக் கண்காட்சி வரும் ஆண்டிலும் நடத்தப்படும்.**
6. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை, வனத்துறை போன்ற **பல்வேறு துறைகளின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் கொண்டு வரப்படும்.**
7. சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில் இரண்டு இலட்சம் சதுர அடி பரப்பளவில் எட்டு தளங்களுடன் நவீன வசதிகளைக் கொண்ட மாபெரும் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. '**கலைஞர் நூற்றாண்டு நூலகம்" என்ற பெயரைத் தாங்கி, வரும் ஜீன் மாதம் முதல் வாசகர்களை வரவேற்கும்.** வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக்கல்வித் துறைக்காக 40,299 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உயர்கல்வியும் திறன்மேம்பாடும்

1. **54 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் 2,783 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'திறன்மிகு மையங்களாக' தரம் உயர்த்தப்படும்.**

2. தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த திறன் பயிற்சியை வழங்குதல், திறமையான பணியாளர்களை உருவாக்குதல் போன்ற நோக்கங்களுடன், **120 கோடி ரூபாய் செலவில் சென்னை அம்பத்தூரில் 'தமிழ்நாடு உலகளாவிய புதுமை முயற்சிகள் மற்றும் திறன் பயிற்சி மையம்' (TN-WISH) அமைக்கப்படும்.**
3. **இளைஞர்களுக்கு தொழிற்சாலைகளிலேயே பயிற்சி அளித்திட தொழில் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும். தொழிற்சாலைகளில் திறன் பள்ளிகள் (Factory Skill Schools) என்ற இத்திட்டத்திற்கு இந்த ஆண்டில், 25 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.**
4. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
5. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய வகுப்பறைகள். கூடுதல் ஆய்வகங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் வரும் நிதியாண்டிலும் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
6. **குடிமைப் பணிகள் தேர்வு மாணவர்களுக்கு** மேம்பட்டப் பயிற்சி மற்றும் பயிற்சிப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தும் ஒவ்வோராண்டும் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் **முதல்நிலை தேர்விற்குத் தயாராகுவதற்காக மாதத்திற்கு 7,500 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.**

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு

1. **சென்னையில் ஓர் உலகளாவிய அதிநவீன விளையாட்டு நகரத்தை இந்த அரசு அமைக்கும்.**
2. 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன விளையாட்டு வசதிகளுடன் சென்னை ஜவஹர்லால் நேரு திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தை விரிவாக சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன்

1. **மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரியில் அம்மாணவர்கள் பயன்பெறும் வகையில் நான்கு புதிய விடுதிகள் நவீன வசதிகளுடன் 100 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் கட்டப்படும்.**
2. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய ஒரு சிறப்புச் சட்டத்தை இந்த அரசு இயற்றும்.**
3. **ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வண்ணம்,** வரும் நிதியாண்டிலிருந்து '**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்**' என்னும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் இயந்திரங்களையும், கருவிகளையும் கொள்முதல் செய்வதற்காக 35 சதவீதம் மூலதன மானியமும் 6 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும். 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளில் **இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.**
4. நகர்ப்புறப் பகுதிகளிலும் ஊரகப்பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்து, முழுமையான சமூக-பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த '**அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்**' நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் **வரும் ஐந்தாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.**

## மாற்றுத் திறனாளிகள் நலன்

1. உலக வங்கி நிதியுதவியடன் 1,763 கோடி ரூபாய் மதிப்பில், மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைத் திட்டம் (RIGHTS Project) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகக்கூடிய தடையற்ற கட்டமைப்புகளை அமைத்து, தொழில் பயிற்சி மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அனைவரையம் உள்ளடக்கிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம், 2023-2024 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

## பெண்கள் அதிகாரமளித்தல்

1. **மகளிர் உரிமைத்தொகை திட்டம்**

- குடும்ப தலைவிகளுக்கு மாதம் 1000 வழங்கப்படும் தமிழகத்தில் உள்ள சுமார் 1 கோடி பெண்கள், மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.
- செப்டம்பர் 15 முதல் இத்திட்டத்தை தமிழக அரசு தொடங்கவுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.7, 000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**2. பெண்களுக்கான பிரத்யேகமாக சிறப்பு புத்தொழில் இயக்கம்.**

- காலநிலை தொழில்நுட்பம், கிராமப்புற தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற முன்மொழியும் தொழில் முனைவோர்களை ஆதரிப்பதற்காக, சிறப்பு மையத்தை அமைப்பதற்கு ஸ்டார்ட்அப் TN, பல்வேறு ஆதாரங்களில் இருந்து நிதி திரட்டி அவர்களுக்கு உதவும்.

3. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30, 000 கோடி வங்கிக் கடன்.

## உள்கட்டமைப்பு மேம்பாடு

1. மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவி மற்றும் தனியாரின் பங்களிப்புடன் ரூ.880 கோடி செலவில் சேலத்தில் புதிய ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும்
2. கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் சேவை திட்டத்தை செயல்படுத்த ரூ.9000 கோடி மற்றும் ரூ.8,500 கோடி ஒதுக்கீடு
3. 1,000 புதிய பேருந்துகள் வாங்கவும், மேலும் 500 பேருந்துகளை புதுப்பிக்கவும் ரூ.500 கோடி ஒதுக்கீடு.
4. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நர்சிங் கல்லூரி மற்றும் விடுதியுடன் புதிய பல்நோக்கு சிறப்பு வசதிகள்
5. அம்பத்தூரில் உலகளாவிய புதுமை முயற்சி மற்றும் திறன் மையம் அமைக்கப்படும்.
6. 1000 கோடி ரூபாயில் வடசென்னை வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும்.
7. சிங்கார சென்னை திட்டத்தின் நோக்கத்தை நனவாக்கும் வகையில் பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளுடன் 44 கி.மீ நீளத்துக்கு அடையாறு ஆற்றின் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். 1,500 கோடி மதிப்பிலான இந்தத் திட்டம் பொதுத் தனியார் கூட்டாண்மை மூலம் (பிபிபி) செயல்படுத்தப்படும்.

## இதர செய்திகள்

- ரூ. 2,000 கோடியில் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்.

- ஈரோடு மாவட்டத்தில் பெரியார் பெயரில் வனவிலங்கு சரணாலயம்.
- மரக்காணத்தில் பன்னாட்டுப் பறவைகள் மையம்.
- 10,000 சிறிய நீர்நிலைகள்–குளங்கள் ரூ.800 கோடியில் புதுப்பிப்பு.
- ரூ.7145 கோடியில் ஒகேனக்கலில் 2– வது கூட்டுக் குடிநீர் திட்டப் பணி.
- ரூ. 1,500 கோடியில் அடையாறு ஆறு மறுசீரமைப்புப் பணி.
- சென்னை தீவுத் திடலில் திறந்தவெளி திரையரங்கம் உட்பட புதுமை வசதிகள்
- ரூ.320 கோடியில் சென்னையில் வெள்ளத் தடுப்புப் பணிகள்

## தமிழக வேளாண் பட்ஜெட் 2023-2024

### வேளாண்மை பட்ஜெட் ஒதுக்கீடு:

1. 38 ஆயிரத்து 904 கோடியே 46 இலட்சத்து ஆறு ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
2. 2021–22 ஆம் ஆண்டில் 185 வேளாண் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு, தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, அவர்கள் மூலமாக 'அக்ரி கிளினிக்' வேளாண்மை சார்ந்த தொழில்கள் தொடங்கப்பட்டன.

**(1) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்**

1. சிற்றூரில் வேளாண்மை முழுமையாக வளர்வதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும், வேண்டிய மற்ற பணிகளையும் மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட திட்டமே, இத்திட்டம்.
2. வரும் ஆண்டில் இத்திட்டம் 2,504 கிராம ஊராட்சிகளில் 230 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**(2) தமிழ்நாடு சிறு தானிய இயக்கம்**

1. 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அறிவித்திருப்பதை ஒட்டி, தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளது.
2. மக்களிடையே சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில், போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு "**சிறுதானிய திருவிழாக்களும்**" இவ்வியக்கத்தின் மூலம் நடத்தப்படும்.
3. **வரும் ஆண்டில், ஒன்றிய, மாநில அரசு நிதி உதவியுடன் 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.**

**(3) மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்**

1. வரும் ஆண்டில், 64 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செயல்படுத்தப்படும்.

**(4) அங்கக வேளாண்மை (organic Farming ) ஊக்குவிப்பு**

1. **அங்கக வேளாண்மையை ஊக்குவிக்கும் வண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை அண்மையில் வெளியிடப்பட்டது.**
2. **விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில், காலதாமதம் இன்றி இப்பணியினை சிறப்பாக மேற்கொள்ளும் மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது வழங்கப்படும்.**

**(5) சிறந்த அங்கக விவசாயிக்கான "நம்மாழ்வார் விருது"**

1. அங்கக வேளாண்மையில் ஈடுபடுவதோடு, அதனை ஊக்குவித்து பிற அங்கக விவசாயிகளுக்கும் கைகொடுக்கும் விவசாயிகளுக்கு **தமிழ்நாடு அரசால் "நம்மாழ்வார் பெயரில் விருது வழங்கப்படும்".** இவ்விருது ஐந்து இலட்சம் ரூபாய் பணப்பரிசு, பாராட்டுப் பத்திரத்துடன் குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

## GRAINS –ஒரு தளம் – பல பயன்கள்

1. அனைத்து விவசாயிகளின் அடிப்படை தகவல்களை வங்கிக் கணக்கு, ஆதார் எண், நில விவரங்கள், பயிர் சாகுபடி விவரங்களை கிராம வாரியாக சேகரித்து, கணினிமயமாக்கி புதிய இணையதளமான 'GRAINS' (Grower Online Registration of Agriculture Inputs System) அறிமுகப்படுத்தப்படும். **இதனால் விவசாயிகளுக்கு ஒரே தளத்தில் எல்லா பயன்களும் (One Stop Solution) கிடைக்கும்.**

## பயறு பெருக்குத் திட்டம்

1. தமிழ்நாட்டில் பயறு வகைகளின் பரப்பளவையும், உற்பத்தியையும் அதிகரித்திட பயறு பெருக்குத் திட்டம் நிதியாண்டில் 30 கோடி ரூபாயில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## எண்ணெய் வித்துக்கான சிறப்புத் திட்டம்

1. தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை உயர்த்திடும் நோக்கத்துடன், சூரியகாந்தி பயிரின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், அதிக இலாபம் தரக்கூடிய நிலக்கடலை, எள், சோயா மொச்சை போன்ற பயிர்களைப்

பரவலாக்கம் செய்திடவும் வரும் நிதியாண்டில் **33 கோடி ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

1. இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தினை மிகுந்த நிதி நெருக்கடியான சூழ்நிலையிலும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.
2. **ஆண்டில், காப்பீட்டுக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்களிப்பாக 2,337 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

## தொகுப்பு முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி

1. **மதுரை மல்லிகைக்கு ஓர் இயக்கம்**
2. **பலா இயக்கம்**
3. **மிளகாய் மண்டலம்**
4. **கறிவேப்பிலைத் தொகுப்பு**
5. **முருங்கை இயக்கம்**
    1. வரும் ஆண்டு 1,000 எக்டர் பரப்பில் முருங்கை சாகுபடி ஊக்குவிக்கப்படுவதோடு, பதப்படுத்துதலுக்கும் மதிப்புக்கூட்டுதலுக்கும் உரிய வசதிகள் ஏற்படுத்தப்படும்.
6. **நுண்ணீர்ப் பாசனம் அமைத்தல்**
    1. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கான மொத்த நிதியான 744 கோடி ரூபாய் நிதியில், சுமார் 60 சதவிகித நிதியான 450 கோடி ரூபாயில் இக்குறு வட்டங்களில், 53,400 எக்டர் பரப்பில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.
7. **உழவர்களுக்கு அயல்நாட்டில் பயிற்சி**
    1. 150 முன்னோடி விவசாயிகளை இஸ்ரேல், நெதர்லாந்து, தாய்லாந்து, எகிப்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து **மூன்று கோடி ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## தேனி மாவட்டத்தில் வாழை தொகுப்பு வளர்ச்சித் திட்டம்:

1. வாழையின் உற்பத்தித்திறனில் தமிழ்நாட்டில் முதலிடம் வகிக்கும் தேனி மாவட்டத்தில், வாழைக்கென தனி அடையாளம் உருவாக்கி உலக சந்தைக்கு கொண்டு சேர்க்கும்

விதத்தில், **வாழைக்கென்று ஒரு தனி தொகுப்புத் திட்டம் 130 கோடி ரூபாய் நிதி** மதிப்பீட்டில் அரசு, தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

### பள்ளி மாணவர்களுக்குப் பண்ணைச் சுற்றுலா

1. வயல்களை, தோப்புகளை, தோட்டங்களை, பாசனக் கிணறுகளை, பழ மரங்களை, மாணவர்கள் நேரடியாக காண வேண்டுமென்பதற்காகவும், வேளாண்மையின் மகத்துவத்தை அவர்கள் அறிந்து, உணர்ந்து, தெளிந்து, தேற வேண்டுமென்பதற்காகவும், பண்ணைச் சுற்றுலா கல்வித் துறையுடன் இணைந்து செயல்படுத்தப்படும்.
2. மாணவ சமுதாயத்திற்கு இந்தச் சுற்றுலா விழிப்புணர்வை ஏற்படுத்தும். இத்திட்டம் ஒரு கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.

### பனை மேம்பாட்டு இயக்கம்

- பனை சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு ஆற்றங்கரைகள் போன்ற பொது இடங்களில் நடவு செய்ய 10 இலட்சம் பனை விதைகள் வழங்கப்படும்.

### பனை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

1. தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் பனைக்கென தனி ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும். இதற்கென **15 கோடி ரூபாய்** ஒதுக்கப்படும்.

### வேளாண் இயந்திரமயமாக்குதல்

1. வேளாண் இயந்திரங்கள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், கரும்பு சாகுபடிக்கு ஏற்ற இயந்திரங்கள், கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ஆகிய இனங்களுக்காக ஒன்றிய , மாநில அரசின் நிதியிலிருந்து 125 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். தேர்வும் கணினிமயமாக்கப்படும்.

### ஊரக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

- டிராக்டர், அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றை இயக்குவதற்கும், கையாள்வதற்கும் 500 ஊரக இளைஞர்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் இயந்திரங்களை இயக்குவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

### இ-வாடகை செயலியில் தனியார் இயந்திரங்கள், பழுதுநீக்குபவர்கள் விபரங்கள் இடம்பெறுதல்

- விவசாயிகள் உழவுப் பணியினைத் தங்குதடையின்றி மேற்கொள்ள உதவிடும்பொருட்டு, தனியாருக்குச் சொந்தமாக டிராக்டர்களின் உரிமையாளர்கள், வேளாண் இயந்திரங்கள், பம்புசெட்டுகளின் பழுதுகளை சரிசெய்யக்கூடிய தனியார் பழுதுநீக்குபவர்களின் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விவரங்கள் வட்டார, மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு உழவன் செயலியோடும் இணைக்கப்படும்.

### ஒவ்வொரு கிராமத்திற்கு இரு "பவர்"டில்லர்கள்"

1. சிறிய வகை வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் அவசியம் கருதி, தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமாக "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டக்" கிராமங்களில், ஒரு கிராமத்திற்கு இரண்டு பவர்டில்லர் இயந்திரங்கள் என்ற அடிப்படையில் **வரும் நிதியாண்டில், 2,504 கிராமங்களுக்கு 43 கோடி ரூபாய் மானியத்தில் 5,000 பவர்டில்லர்கள் வழங்கப்படும்.**

### புவிசார் குறியீடு பெறுதல்

1. கடந்த ஆண்டில், சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலாப்பழம் உள்ளிட்ட 10 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2. இதேபோன்று, வரும் ஆண்டிலும், கிருஷ்ணகிரி அரசம்பட்டி தென்னை, கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா, தஞ்சாவூர் பேராவூரணி தென்னை, மூலனூர் குட்டை முருங்கை, சாத்தூர் வெள்ளரி, தஞ்சாவூர் வீரமாங்குடி அச்சுடிவல்லம், தூத்துக்குடி விளாத்திகுளம் மிளகாய், கடலூர் கோட்டிமுளை கத்திரி, மதுரை செங்கரும்பு, சிவகங்கை கருப்புகவுணி அரிசி ஆகிய பத்து பொருட்களுக்கு புவிசார் குறியீடு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

### உழவர் சந்தைகளைப் புதுப்பித்தல்

1. உழவர் சந்தைக்கு வரும் விவசாயிகள், பொதுமக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து, சராசரியாக நாளொன்றுக்கு 8,000 விவசாயிகள், மூன்று இலட்சம் நுகர்வோர் பயனடைந்து வருகின்றனர்.

2. 25 உழவர் சந்தைகளுக்கு அடிப்படைத் தேவைகளான குடிநீர், கழிப்பறைகள் வசதி, கடைகள் புனரமைப்பு, நடைபாதை வசதிகள் போன்ற பணிகள் **ஒன்பது கோடி ரூபாய்** மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். மேலும், **50 உழவர் சந்தைகளுக்கு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று** (FSSAI Certificate) பெற வரும் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### தொன்மை சார் உணவகங்கள்

1. தொன்மை மிக்க ஊட்டச்சத்து நிறைந்த சிறுதானியக் கூழ் வகைகள், சிற்றுண்டிகள், மூலிகை சூப் வகைகள் போன்ற உணவுகளை வழங்கவும், வருகிற நுகர்வோர்கள் அவற்றை அருந்தி, விழிப்புணர்வு பெறவும், முதல் கட்டமாக 25 உழவர் சந்தைகளில் தொன்மை சார் உணவகங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்படும்.

### மின்னணு தேசிய வேளாண் சந்தை (இ-நாம்) – விரிவுபடுத்துதல்

1. 30 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் **ஒன்பது கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணைக்கப்படும்.**

### பூச்சிகள் அருங்காட்சியகத்தை மேம்படுத்துதல்

1. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோயம்புத்தூர், வளாகத்தில் பல்வேறு விதமான பூச்சிகள் சேகரிக்கப்பட்டு, அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

### வேளாண்மையில் நானோ தொழில்நுட்பம்

1. உரம், நுண்ணூட்டம், பூச்சிக்கொல்லி, விளைபொருளின் தரமறிதல், சேமிப்பு காலத்தை அதிகரித்தல் ஆகியவற்றில் நானோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. நானோ யூரியா ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, ட்ரோன் தொழில்நுட்பத்துடன் சேர்த்துப் பரவலாக்கப்பட்டு வருகிறது.
2. நானோ தொழில்நுட்பம் குறித்து விவசாயிகள் அறியும் வண்ணம் வேளாண் அறிவியல் நிலையம்(KVK), அட்மா திட்டம்(ATMA) ஆளில்லா வானூர்திக் கழகம்(Unmanned Arial Vehicle Corporation) மூலம் செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்படும்.

### கூட்டுறவு பயிர்க் கடன்

1. **வரும் ஆண்டில் 14,000 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவு பயிர்க்கடன் வழங்கப்படும்.**

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் 'மதி-பூமாலை' வளாகத்திலும் சிறுதானியங்களில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக, **சிறுதானிய சிற்றுண்டி உணவகம்(millet cafe)** உருவாக்கப்படும்.

## வனவிலங்குகளினால் ஏற்படும் பயிர் சேதம் குறித்து ஆராய்ந்து தீர்வு காண தனிக்குழு

1. வனவிலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பது, சட்டவிதிகளுக்கு உட்பட்டு, வனத்துளை மூலம் அரசு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது குறித்தும் ஆராய்வதற்கு கூடுதல் முதன்மை வனப்பாதுகாவலர் (வனவிலங்குகள்) தலைமையில் தனிக்குழு ஒன்று அமைக்கப்படும்.
2. தமிழ்நாடு அரசு, பசுமைத்தமிழக இயக்கத்தின் கீழ், வேளாண் காடு வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் மதிப்புமிக்க மரக்கன்றுகளான சந்தனம், செம்மரம், தேக்கு, ஈட்டி, போன்றவைகளை இலவசமாக வழங்கி வருகிறது.

## காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள்

1. காவிரி டெல்டா மாவட்டங்களில், உழவர்களுக்கு அதிக வருமானம் ஈட்டவும், இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், வேளாண் தொழில் பெருந்தடத்தினை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
2. காவிரி டெல்டா பகுதிகளில் வேளாண் தொழில்நுட்ப புத்தொழில்களை வளர்ப்பதற்காக தஞ்சாவூரில் புதிய வட்டார புத்தொழில் மையம் ஒன்று தமிழ்நாடு புத்தொழில் – புத்தாக்க இயக்கம் மூலம் உருவாக்கப்படும்.
3. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் தொழில் பெருந்தட திட்டம் செயல்படுத்தப்படும்.

## இதர செய்திகள்

### 'எர்த் ஹவர்' (EARTH HOUR):

- எர்த் ஹவர் என்பது உலக வனவிலங்கு நிதியத்தால் (WWF) ஏற்பாடு செய்யப்பட்ட உலகளாவிய இயக்கமாகும்.
- மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று இரவு 8:30 மணி முதல் 9:30 மணி வரை, தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களை அத்தியாவசியமற்ற

மின் விளக்குகளை அணைக்க ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது.

## பாலில் கலப்படத்தைக் கண்டறியும் சாதனம் கண்டுபிடிப்பு

- பாலில் கலப்படத்தைக் கண்டறிய முப்பரிமாண (3டி) கையடக்க காகித சாதனத்தை மெட்ராஸ் IIT உருவாக்கியுள்ளது.
- மெட்ராஸ் IIT ஆராய்ச்சியாளர்கள் முப்பரிமாண (3டி) காகித அடிப்படையிலான கையடக்க சாதனத்தை உருவாக்கியுள்ளனர், இதன் மூலம் பாலில் கலப்படத்தை 30 வினாடிகளுக்குள் கண்டறிய முடியும். இந்த சோதனையை வீட்டிலேயே கூட செய்யலாம்.
- யூரியா, சவர்க்காரம், சோப்பு, ஸ்டார்ச், ஹைட்ரஜன் பெராக்சைடு, சோடியம்–ஹைட்ரஜன்–கார்பனேட் மற்றும் உப்பு உள்ளிட்ட கலப்படத்துக்குப் பொதுவாக பயன்படுத்தப்படும் பல பொருட்களைக் கண்டறிய முடியும்.
- வழக்கமான ஆய்வக அடிப்படையிலான பாலின் தூய்மையை பரிசோதிக்கும் முறைகளில் கால விரயம் மற்றும் கூடுதல் செலவு ஏற்படுகிறது , இந்த புதிய தொழில்நுட்பம் மலிவு விலையில் தண்ணீர், பழச்சாறு மற்றும் மில்க் ஷேக் போன்ற பிற திரவங்களை சோதிக்கவும் பயன்படுத்தப்படலாம்.

## இ–சேவை மையம் 2.0 அறிமுகம்

- இ–சேவை மையம் 2.0 விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார்.
- இ–சேவைமையங்களில் 600 வகையான சேவைகள் விரைவில் வழங்கப்படும். தமிழக அரசின் 235 சேவைகள் 9720 இ–சேவா மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது.
- இதன் மூலம், அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் வெளிப்படைத்தன்மையுடன் விரைவாகக் கிடைக்கும்.

## முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 588 பேருக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை

- செப்டம்பர் 5, 2008 அன்று, முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில், தமிழக அரசு 2008–ல் மூளை இறப்புச் சான்றிதழைக் கட்டாயமாக்கி, மூளை இறப்பு உறுப்பு தானத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது.

- அப்போதிருந்து, இந்த அமைப்பு தமிழ்நாடு மாற்று அறுவை சிகிச்சை ஆணையமாக (TATN) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவின் தலைநகரம் தமிழ்நாடு. உடல் உறுப்பு தானத்தில் சிறந்த மாநிலம் என்ற மத்திய அரசின் விருதை தொடர்ந்து 6 முறை தமிழகம் பெற்றுள்ளது.

**ஆகஸ்ட் 13 – உலக உறுப்பு தான தினம்.**

**'விடியல் செயலி '**

- இந்தியாவிலேயே முதன்முறையாக உடல் உறுப்பு தானம் பதிவு செய்யும் முறை தற்போது விடியல் என்ற முழு தானியங்கி செயலி மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- அதேபோல், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் 588 பேர் மருத்துவக் காப்பீடு பெற்றுள்ளனர். ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக சிகிச்சைக்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது.

**கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான திட்டம்**

- கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் IIT,IIM கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டால் அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ 50000 வழங்கப்படும்
- பயனாளிகளின் எண்ணிக்கையில் உச்சவரம்பு இல்லை என்றாலும், ஆரம்பத்தில் மொத்தம் 35 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்.
- புற்றுநோய், ஆஸ்துமா, சிறுநீரக செயலிழப்பு மற்றும் சிலிகோசிஸ் போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெற்று வரும் TNCWWB இன் உறுப்பினர்களுக்கு, அவர்களால் வேலை செய்ய முடியாத நிலையில், ஆண்டுக்கு ₹12,000 உதவி வழங்கப்படும், இது இரண்டு தவணைகளில் வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும்.

**ஓய்வுபெற்ற நீதிபதி எம்.சத்தியநாராயணன் குழு**

- புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு தண்ணீர் வழங்கும் மேல்நிலை தொட்டியில் இருந்துமனித மலம்

கலந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஓய்வு பெற்ற நீதிபதி எம். சத்தியநாராயணனை ஒரு நபர் கமிஷனாக சென்னை உயர்நீதிமன்றம் நியமித்தது.

### நிர்பயா நிதி

- நிர்பயா நிதியின் கீழ் பாதுகாப்பான நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெருநகரப் போக்குவரத்துக் கழகத்தின் (எம்டிசி) 2,500 பேருந்துகளில் ₹72.71 கோடி செலவில் கேமராக்கள் பொருத்தப்பட்டன.

### நிர்பயா நிதி பற்றி:

- 2013 யூனியன் பட்ஜெட்டில் ரூ.1,000 கோடி நிர்பயா நிதி அறிவிக்கப்பட்டது.
  பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை நிலைநிறுத்துவதற்காக இந்நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.
- இந்த நிதியின் கட்டமைப்பு, நோக்கம் மற்றும் பயன்பாடு பற்றிய விவரங்களைத் தயாரிக்க, சம்பந்தப்பட்ட பல அமைச்சகங்களோடு , பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இணைந்து பணியாற்றும் .
- நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையால் இந்த நிதி நிர்வகிக்கப்படுகிறது.

### இ-வாகன சேவை

- 2021-22ல் பதிவு செய்யப்பட்ட 39,617 பேட்டரியில் இயங்கும் வாகனங்களுடன் ஒப்பிடுகையில், 2022-23 (பிப்ரவரி வரை) 59,951 போக்குவரத்து அல்லாத வாகனங்கள் (தனிப்பட்ட பயன்பாடு) உட்பட மொத்தம் 62,482 பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- மோட்டார் வாகன வரியிலிருந்து இ-வாகனங்களுக்கான 100% விலக்கை டிசம்பர் 2025 வரை மாநில அரசு நீட்டித்துள்ளது.
  சமீபத்தில் அரசு இ – வாகனக் கொள்கை 2023 யை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

## தினசரி நடப்பு நிகழ்வுகள்

### ஒடிஸாவில் ஓபிசி பிரிவினர் கணக்கெடுப்பு

- பீகார் மாநிலத்தை தொடர்ந்து ஒடிஸாவிலும் இதர பிற்படுத்தப்பட்டோர் (ஓபிசி) தொடர்பான
- ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அந்த மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

### அதானி – ஹிண்டன்பர்க் விவகாரம்: ஏ. எம். சாப்ரே தலைமையில் குழு

- அதானி குழுமம் – ஹிண்டன்பர்க் விவகாரத்தை ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஏ.எம். சாப்ரே (68) தலைமையில் 6 பேர் கொண்ட குழுவை அமைத்து உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.
- ஓய்வு பெற்ற நீதிபதி சாப்ரே தலைமையில் 6 பேர் கொண்ட நிபுணர் குழுவை அமைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.
- அண்மையில் பங்குச் சந்தையில் ஏற்பட்ட ஏற்ற – இறக்கத்துக்கான காரணிகள் உள்பட ஒட்டுமொத்த நிலைமையையும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதே இந்த நிபுணர் குழுவின் பணியாகும். அதோடு முதலீட்டாளர்களுக்கான விழிப்புணர்வை வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் இந்தக் குழு பரிந்துரைக்கும்.
- பங்குப் பத்திர ஒப்பந்தம் ஒழுங்குமுறை விதிகள் 1957

## குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் மீது கடும் நடவடிக்கை:

### தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு

- குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் குஷ்பு எச்சரித்தார்.

### தேசிய மகளிர் ஆணையம்

- தொடக்கம் 1992
- முதல் தலைவர் ஜெயந்தி பட் நாயக்
- தற்போது ரேகா சர்மா

## ஹெச்3என்2 பருவகால காய்ச்சலுக்கு இருவர் பலி

- நாட்டின் பல மாநிலங்களில் ஹெச்3என்2 பருவகால காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளது.
- குழந்தைகள், சிறார்கள், முதியோர் ஆகியோரே பருவகால காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

### இன்ஃப்ளுயன்ஸா A (H3N2) பற்றி:

- பருவகால காய்ச்சல் என்பது இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்களால் ஏற்படும் கடுமையான சுவாச தொற்று ஆகும். இன்ஃப்ளுயன்ஸா ஏ துணை வகை H3N2 தான் நாட்டில் தற்போதைய சுவாச நோய்க்கு முக்கிய காரணம் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) தெரிவித்துள்ளது

## 9வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலகப் பொருளாதார உச்சி மாநாடு

- 9வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலகப் பொருளாதார உச்சி மாநாடு 2023 மார்ச் 18 முதல் 20 வரை துபாயில் நடைபெற்றது.
- மாநாட்டை அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைத்தார். தமிழ்நாடு

## 9பேருக்கு உலகத் தமிழ் மாமணி விருதுகள்

- தமிழக அமைச்சர் துரைமுருகன்
- மலேசியா பினாங்கு முதல்வர் ராமசாமி
- மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சிரி சரவணன்
- லைக்கா குழுமத்தின் தலைவர் சுபாஷ்கரன் அல்லிராஜா,
- அபுதாபி இந்திய கலாச்சார சங்க மைய தலைவர் நடராஜன்,
- புளோரிடா அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர் கலாமதி
- டர்பன் ஆர்ஆர் குழுமத்தின் தலைவர் இசைவாணி ரெட்டி,
- KPMG தலைமை தணிக்கையாளர் கோபால் பாலசுப்ரமணியம்
- பிளாக் குழும நிறுவனர் முகமது கனி முகமது ஆகியோருக்கு உலகத் தமிழ் மாமணி விருது வழங்கப்பட்டது.

## வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா

- வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா மார்ச் தொடங்கி ஓராண்டு முழுவதும் நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்த தெருக்களில் ஒடுக்கப் பட்டவர்கள் நடந்து செல்வதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி, வைக்கம் போராட்டம் நடைபெற் றது. இந்தப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவர் பெரியார் ஈ.வெ.ரா. 1924-ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் தேதி தொடங்கிய போராட்டம், 1925-ஆம் ஆண்டு நவ. 23-ஆம் தேதி முடிவுக்கு வந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன.

## 'வைக்கம்போராட்டம் 'நூல்

- மாநிலத்தின் மிக முக்கிய ஆய்வாளர்களில் ஒருவரான பழ.அதியமான் எழுதிய 'வைக்கம் போராட்டம்' என்ற. தமிழ் நூலின் மலையாள மொழி பெயர்ப்பு

வெளியிடப்படுகிறது.இதன் தெலுங்கு கன்னடம், ஆங்கிலப்பதிப்புகளும் விரைவில் வெளியிடப்படும்.

**வைக்கம் விருது:**

- போராட்டம் நடத்திய பெரியார் ஈ.வெ.ரா.வை நினைவு கூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காக பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் வைக்கம் விருது அளிக்கப்படும். பெரியாரின் பிறந்த தினமான செப். 17- இல் தமிழ்நாடு அரசால் விருது வழங்கப்படும்.
- பெரியார்நினைவிடம் வைக்கத்திலுள்ள பெரியார் ஈ.வெ.ரா. நினைவிடம் ரூ.8.14 கோடியில் நவீனமுறையில் மறுசீரமைக்கப்படும்.

**தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு விருது**

- கன்னியாகுமரியில் கடற்கரை முகப்பு மேம்பாட்டில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
- சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில், சுற்றுலாத் தலங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மத்திய சுற்றுலா அமைச்சகம் மேம்படுத்தி வருகிறது. இதற்காக 'ஸ்வதேஷ் தர்ஷன்' என்ற திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது.

**ஸ்வதேஷ் தர்ஷன் பற்றி:**

- ஸ்வதேஷ் தர்ஷன் என்பது மத்தியத் துறை திட்டமாகும்.
- இது இந்திய அரசின் சுற்றுலா மற்றும் கலாச்சார அமைச்சகத்தால் 2014-15 இல் தொடங்கப்பட்டது.
- இது நாட்டில் கருத்துரு அடிப்படையிலான சுற்றுலா சுற்றுகளை ஊக்குவிக்கிறது . இந்த சுற்றுலா சுற்றுகள் அதிக சுற்றுலா மதிப்பு, போட்டித்திறன் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும்.

**ஸ்வதேஷ் தர்ஷன் 2.0:**

- கருத்துரு அடிப்படையிலான சுற்றுகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, இதன் கீழ், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், ஒரு நேரத்தில் ஒரு இடத்தின் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

- இது இந்தியாவின் புதிய உள்நாட்டு சுற்றுலாக் கொள்கைக்கு ஏற்ப உள்ளது, இது கருத்துரு அடிப்படையிலான சுற்றுலா சுற்றுகளில் இருந்து விலகி இலக்கு சுற்றுலாவை புதுப்பிக்க வலியுறுத்துகிறது.
- இது ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பாகும்.
- இத்திட்டம் 100% மத்திய நிதியுதவி திட்டமாகும்.